Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 12 வள்ளுவர் ஆண்டு 2028 ஆவணி 13 வெள்ளிக்கிழமை (29-8-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 263

# யாழ். வந்த ஐ. நா. ஆணைக் குழு விசேட பிரதிநிதி அதிருப்தி தெரிவிப்பு!

## பொலீஸ் அதிகாரிகளைச் சந்திக்கும் முயற்சி பலனளிக்கவில்லையாம்

யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 29

யாழ். குடாநாட்டில் மனித உரிமை மீறல்கள், விசாரணையின்றி ஆள்கள் கொல்லப்படுவது ஆகியவை குறித்து ஆராய்வதற்காக வருகை தந்த ஐ. நா. மனித உரிமைகள் ஆணைக் குழுவின் விசேட பிரதிநிதி, யாழ்ப்பாணத்தில் தன்னைச்சந்திக்க வேண்டிய முக்கிய தரப்பினரான பொலீஸார், தன்னைச் சந்தித்துப் பேசாது விட்டதால் தான் பெரிதும் அதிருப்தி அடைந்திருப்பதாகத் தெரிவித்திருக்கின்றார்.

யாழ்ப்பாணத்தில் இரு நாள் விஜயம் மேற்கொண்டு நேற்று கொழும்பு திரும்பிய மனித உரிமைகளுக்கான ஐ. நா. ஆணைக் குழுவின் விசேட தொடர்பாளர் பார்க்வலி நிடியே மேற்கண்டவாறு கவலை வெளியிட்டார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட முன்னர் உதயன் செய்தியாளருக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இப்படிக் கூறினார்,

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் இலங்கைக்கு விஜயம் செய்தேன் இலங்கைக்கு வருவதற்கு 10 நாள்களுக்கு முன்பே இலங்கை வெளிவிவகார அமைச்சு மூலம் எனது நிகழ்ச்சி நிரல் ஒழுங்கு படுத்தப்பட்டுவிட்டது.

பலாலி விமான நிலையத்தில் இராணுவ, பொலீஸ் அதிகாரிகள் என்னைச் சந்திக்க ஏற்பாடாகி இருந்தது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## புளியங்குளத்தில் புலிகள் மீண்டும் ஷெல் தாக்குதல்

வவுனியா, ஒக. 29

புளியங்குளம் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 'வெற்றி உறுதி' துருப்பினர் மீது விடுதலைப் புலிகள் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டதாக வவுனியாவுக்கு கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

அதைத் தொடர்ந்து இருதரப்பினருக்கும் இடையில் மோதல் வெடித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

படையினர் தரப்பு சேதவிவரங்கள் தெரியவரவில்லை.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சேதமடைந்த டாங்கிகள் இழுத்துச் செல்லப்பட்டன!

வவுனியா, ஒக. 29

வன்னியில் இடம் பெறும் ''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கைத் துருப்பினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் சேதமடைந்த டாங்கிகள் நேற்று அனுராதபுரத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

யுத்த முனையில் இருந்து நேற்று நாலுக்கு மேற்பட்ட டாங்கிகள் கண்டி வீதி வழியாக இழுத்துச்செல்லப்பட்டன.

கடந்த செவ்வாயன்று நடைபெற்ற சண்டையிலும் அதற்கு முன்னர் நடைபெற்ற சண்டையிலும் யுத்த டாங்கிகள் சேதமடைந்தது தெரிந்ததே.

(இ-164-3)

## ராஜீவ் படுகொலை இடைக்கால அறிக்கை

### நேற்று கையளிக்கப்பட்டது

புதுடில்லி, ஒக. 29

1991 மே மாதம் 21 ஆம் திகதி தமிழ் நாட்டிலுள்ள ஸ்ரீ பெரம்புதூரில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் கலந்துகொள்ள வந்திருந்த போது தற்கொலைக் குண்டுதாரி ஒருவரால் படுகொலை செய்யப்பட்ட முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியின் படுகொலை பற்றிய இடைக்கால அறிக்கையை நீதிபதி ஜெயின் இந்திய அரசிடம் நேற்றுக் கையளித்தார்.

இந்த படுகொலை தொடர்பாக பல அரசியல்வாதிகளும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த பல அதிகாரிகளும் விசாரிக்கப்பட்டனர்.

நேற்று அரசிடம் சமர்ப்பித்த அறிக்கையில் அடங்கியுள்ள விடயங்கள் எதனை

(8ஆம் பக்கம் பார்க்க )

## 37 வடகொரிய மாலுமிகள் இன்று திருமலை புறப்பாடு

### புலிகளிடமிருந்து மொறாங்பொங் கப்பலைப் பொறுப்பேற்பர்

கொழும்பு, ஒக. 29

கடந்த மாதம் விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டு முல்லைத்தீவு அலம்பில் கடற் பகுதியில் நங்கூரமிட்டுள்ள 'மொறாங் பொங்' என்னும் கொரியக் கப்பலை எடுத்து வர 37 வடகொரிய மாலுமிகள் இன்று திருக்கோணமலை புறப்படுகின்றனர்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு கொழும்பு அலுவலக அதிகாரி ஹர்ஷா அபய குணவர்த்தன மேற்கண்ட தகவலை உதயன் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

திருகோணமலையில் இருந்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கொடியுடன் இரு இழுவைப் படகுகளில் அவர்கள் முல்லைத்தீவுக்கு அழைத்துச் செல்லப்படுவர்.

கப்பலில் மேற்கொள்ள வேண்டிய திருத்த வேலைகளை முடித்துக் கொண்டு எதிர்வரும் திங்கட்கிழமை அக்கப்பலை திருகோணமலைக்கு எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது - என்று அவர் தெரிவித்தார்.

கப்பல் மீட்புப்பணிக்காக அந்தக் கடற் பகுதியில் தாக்குதல் நிறுத்தத்தை எதிர்வரும் முதலாம் திகதி வரை கடைப்பிடிக்க கடற்படையும், விடுதலைப் புலிகளும் இணங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

(இ-21-3)

## ஒரு கிலோ மீற்றருக்கு 30 படையினர் இழப்பு

### பி. பி. ஸி. செய்தியாளர் தெரிவிப்பு

லண்டன், ஒக. 29

''வெற்றி உறுதி இராணுவ நடவடிக்கையின் போது தமது தரப்பில் 527 படையினர் உயிரிழந்துள்ளனர் என்று இராணுவ அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். அதாவது கைப்பற்றப்பட்ட பகுதியில் ஒரு கிலோ மீற்றருக்கு 30 படையினர் என்ற வீதத்தில் படையினருக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது.''

பி. பி. ஸி. கொழும்புச் செய்தியாளர் புளோரா பொக்ஸ்பேட் நேற்று மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

(8 ஆம் பக்கம் பார்க்க)



யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட மனித உரிமைகளுக்கான ஐ. நா. ஆணைக் குழுவின் விசேட தொடர்பாளர் பார்க்வலி நிடியே மற்றும் மனித உரிமைகளுக்கான ஐ. நா. நிலைய மனித உரிமை அலுவலர் கரீம் ஜுரேவி ஆகியோர் நேற்று யாழ். நீதிமன்றத்துக்கு விஜயம்செய்தனர்.

அவர்கள் நீதிவான் ஏ. என். எஸ். இராமச்சந்திரனுடன் கலந்துரையாடுவதை முதலாவது படத்திலும், திடீர் மரண விசாரணை அதிகாரி சட்டத்தரணி க. கேசவனுடன் கலந்துரையாடுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

இருபாலை - கேணிக்குளம்பதி
அருள்மிகு லிங்கப்பிள்ளையார்
தேவஸ்தானம்
(பழம்பிள்ளையார்)

## மஹோற்சவ விஞ்ஞாபனம்

ஐங்கரன் அடியார்களே !

29-08-97 பகல் 10-00 மணிக்கு கொடியேற்றம்
04-09-97 நண்பகல் 12 மணிக்கு வேட்டைத் திருவிழா
05-09-97 மாலை 6-30 மணிக்கு சப்பறத் திருவிழா
06-09-97 காலை 9-00 மணிக்கு தேர்த்திருவிழா
07-09-97 காலை 9-00 மணிக்கு தீர்த்தத்திருவிழா
08-09-97 மாலை 5-30 மணிக்கு வசந்தோற்சவம்
09-09-97 பகல் 10-00 மணிக்கு பிராயச்சித்தமும்
வைரவசாந்தியும், அன்னதானமும் நடைபெறும்.

தினசரி: மாலை 05-30 — 06-30 மணிவரை.
''தெய்வீகப் பேருரை''

வழங்குபவர்:-
சிவத்தமிழ் வித்தகர் **சிவ. மகாலிங்கம்**
(விரிவுரையாளர், பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை)

மஹோற்சவ பிரதம குரு:
துவஜாரோகண துரந்தரர், ஆகமகிரியா ஜோதி
**சிவஸ்ரீ சதா. மகாலிங்கசிவக்குருக்கள்**
(நாயன்மார்கட்டு)

''வருக விநாயகன் அருள்பெறுக''

ச. வைத்தியநாதன் ஐயா
(49288) ஆலய பரிபாலகரும் அர்ச்சகரும்.

## வாழ்த்துகின்றோம்

1. செல்வி ம. பிரேமதர்சினி 129 புள்ளிகள்
2. செல்வன் ச. சிவசுதன் 112 புள்ளிகள்

1995 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மேற்படி மாணவர்களையும, அவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து கற்பித்த அதிபர், ஆசிரியரையும் வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சபை.

**யா / மட்டுவில் தெற்கு**
**சாந்தநாயகி வித்தியாலயம்,**
சாவகச்சேரி. (சி/1429)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தெய்வகுணேஸ்வரி தவராஜா

நல்லூரை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்றவர்களான திரு. திருமதி சின்னத்தம்பி குணரட்ணம் அவர்களின் கனிஷ்ட புத்திரி தெய்வகுணேஸ்வரி 26-8-97 அன்று கனடாவில் காலமாகிவிட்டார்.

இவர் திருமதி ச. மணிவாசகர், கு. ராஜரெட்னம், கு. பற்குணராஜா (கோட்டக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.), கு. ஆனந்தராஜா (கனடா) ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெற்றன.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கு. பற்குணராஜா (சகோதரன்)
(கோட்டக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.)
365, கோயில் வீதி,
நல்லூர். (49289)

### V. A. கிருஸ்ணராசா

(ஓய்வு பெற்ற பொலீஸ் இன்ஸ்பெக்டர்)

நெல்லண்டை பருத்தித்துறையைச்சேர்ந்த ஓய்வு பெற்ற பொலீஸ் இன்ஸ்பெக்டர் V. A. கிருஸ்ணராசா அவர்கள் 28-08-1997 இல் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ் சென்றவர்களான வே. ஆறுமுகம் இராசம்மா ஆகியோரின் அன்புப் புதல்வரும், இராசலட்சுமியின் அன்புக்கணவரும், இராதா கிருஷ்ணன், மோகன கிருஷ்ணன், ஆனந்த கிருஷ்ணன், வைகுந்த கிருஷ்ணன், அற்புத கிருஷ்ணன், கிருஷ்ணலீலா, கிருஷ்ணரூபி, காலஞ்சென்ற இராமகிருஷ்ணன், ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி கிவபாக்கியம் கனகசபையின் அன்பு மருமகனும், மாணிக்கம் காலஞ்சென்றமுத்துலட்சுமிமற்றும் செல்லக்கண்டுஆகியோரின் அன்புச் சகோதரரும். ஜெயந்தி, சகுந்தலா தேவி, கிரிசாந்தி, வைகுந்தலீலா, இராஜேஸ்வரன், ஆகியோரின் அன்பு மாமனாரும். ரமேஸ், அபிராமி, ரம்யா, அபிராம், ராகவி ஆகியோரின் அன்புப்பேரனுமாவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் இன்று (29-8-97) வெள்ளிக்கிழமை பிற்பகல் கோரியடி மாயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்சள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. மோகனகிருஷ்ணன்
(மகன்)
நெல்லண்டை,
பருத்தித்துறை.
(49279)

# ஐ. நா. அபிவிருத்தி உதவியுடன் ஐந்து பாடசாலைகள் புனரமைப்பு!

யாழ்ப்பாணம், ஓக. 29 வலிகாமத்தில் உள்ள ஐந்து பிரபல கல்லூரிகள் ஐ. நா. அபிவிருத்தித்திட்ட உதவியுடன் புனரமைக்கப்படவுள்ளன.

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம், அளவெட்டி அருணோதயக் கல்லூரி, சுன்னாகம் இராமநாதன்கல்லூரி ஆகிய ஐந்து கல்லூரிகளையுமே புனரமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

வலிகாமம் பகுதியில் மீளக் குடியமர்ந்துள்ள குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள் கல்வி பயில வசதியாகவே இவை புனரமைக்கப்படவிருக்கின்றன.

இக் கல்லூரிகளைப் புனரமைக்கத் தேவையான நிதியை வழங்க ஐ. நா. அபிவிருத்தித்திட்டம் இணங்கியுள்ளதையடுத்து, அக்கல்லூரிகளின் கட்டட, தளபாட வசதிகள் குறித்து ''யுனெஸ்கோ'' அமைப்புப் பிரதிநிதிகள் விவரங்களைத் திரட்டி வருகின்றனர். (ஐ-3)

# சுன்னாகம் கூ. சங்கத்தை திருத்த 140 லட்சம் ரூபா உதவி தேவை

### அரச அதிபரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 29 கடந்த வன்செயல் சம்பவங்களால் சேதமடைந்துள்ள சுன்னாகம் ப. நோ. கூ. சங்கத்தை மீளக்கட்டியெழுப்ப 140 லட்சம் ரூபா உதவி தேவை என்று சுன்னாகம் ப. நோ. கூ. சங்கத் தலைவர் சி. குமாரவேலு தெரிவித்துள்ளார்.

யாழ். அரச அதிபருக்கு அவர் சமர்ப்பித்துள்ள மதிப்பீட்டு அறிக்கையிலேயே மேற்கண்ட நிதி உதவி தேவை என அவர் கேட்டுள்ளார்.

சங்கத்தின் கட்டடங்கள், களஞ்சியங்கள், அரிசிஆலை, வாகனங்கள், மீளளிக்கப்படாத கடன்கள் ஆகியன மூலம் சங்கத்துக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்றும்— சங்கத்தை மீண்டும் கட்டியெழுப்ப 140 லட்சம் ரூபா தேவை என்றும்— அவர் தெரிவித்துள்ளார்.

ஐ. நா. அபிவிருத்தித் திட்டம் மூலம் இந்த உதவியைப் பெற்றுத் தருமாறும் அவர் அரச அதிபரிடம் கோரியுள்ளார். (ஐ-3)

அரசமைப்புத் திருத்தம்:

# ஐ. தே. க. ஆதரவு தரத் தவறினால் மக்கள் ஆதரவுடன் அரசு செயற்படும்

கொழும்பு, ஓக. 29 ''தற்போதைய அரசமைப்பைத் திருத்துவதற்கு நாடாளுமன்றத்தில் ஐ. தே. க. ஆதரவு தரத் தவறினால் பெரும்பான்மை மக்களின் இணக்கத்துடன் அரசாங்கம் நல்லதொரு பதிலைத் தரத் தீர்மானித்துள்ளது.''

வெகுஜனத் தொடர்பு அமைச்சர் மங்கள சமரவீர அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிப்பதற்கான செய்தியாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழித்தல், அதிகாரப் பரவலாக்கல் அலகு மற்றும் பல முக்கிய அம்சங்கள் அடங்கிய புதிய அரசமைப்பு விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

ஐ. தே. க. 1977 ஆம் வருட தேர்தல் பிரசாரத்தின் போது, அதற்கு முந்திய அரசமைப்புக்குப் பதிலாக புதிய அரசமைப்பு ஒன்றை அறிமுகம் செய்வது பற்றி எதுவும் தெரிவிக்கவில்லை என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

எனவே தற்போதைய அரசமைப்பு மக்களின் விருப்பு இன்றியே இன்று அமுலில் இருந்து வருகின்றது என்று தெரிவித்த அமைச்சர் இதனை மாற்றியமைக்க வேண்டும் என்பதில் அரசாங்கம் உறுதியான தீர்மானம் எடுத்துள்ளது என்று கூறினார்.

அரசமைப்பில் மாற்றங்களைக் கொண்டுவர நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்றாகவேண்டும். ஆனால் தற்போதைய நிலையில் எந்தவொரு தனிக்கட்சியும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றுக் கொள்ளமுடியாது என்றும் அவர் கூறினார்.

### நல்லூரில் இன்று

நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் மேற்கு வீதி, ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் கான கதாவாரிதி பிரம்மஸ்ரீ. சிவ. வை. நித்தியானந்த சர்மா தினமும் மாலை 5.15 மணிக்கு நிகழ்த்திவரும் கந்தபுராணம் தொடர் இசைச் சொற்பொழிவில் இன்று ''சிங்கமுகாசூரன்'' என்னும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறும்

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி அதிபர்
திரு. வி. மாணிக்கம் அவர்களின்
மூத்த சகோதரன்
**விநாயகன் சுப்பிரமணியம்**

அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆசிரியர்கள்
**யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்.**
[49285]

அரசாங்க, மாகாண
எழுதுவினைஞர்
சேவைக்கான
ஆள்சேர்ப்பு போட்டிப்
பரீட்சைக்குரிய
**பொது**
**உளச்சார்பு**
**பொது அறிவு**
ஆசிரியர்
திரு.
வே. யுகபாலசிங்கம்
M. A., Dip. in Edu.
**ஆரம்பம்:**
**30-08-97**
சனி பி.ப. 2 மணி
**பட்டப்படிப்புகள்**
**கல்லூரி**
73, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி.
[illegible]

## COLLEGE OF COMMERCE

நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

**கலை - வர்த்தகம்**
**A/L 99, 98**

புதிய பிரிவுகள் நடைபெறுகின்றன. அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.

| | |
|---|---|
| கணக்கியல் | — திரு. வன்னியசிங்கம் |
| வர்த்தகம் | — திரு. பசில் |
| புள்ளிவிவரவியல் | — திரு. தவசேகர் |
| பொருளியல் | — திரு. இராஜேஸ்வரன் |
| அளவையியல் | — திரு. R. P. சர்மா |
| தமிழ் | — திருமதி மீரா |
| இந்துநாகரிகம், இந்துசமயம் | — திரு. ஜோதீஸ்வரன் |
| புவியியல் | — திரு. இக்னேஸ்சியஸ் |
| நாடக, அரங்கியல் | — திரு. கந்தவேள் |
| கிறிஸ்தவம் | — திரு. றெஜினோல்ட் |

A/L 97 பரீட்சை எடுத்த மாணவர்களுக்கு
மீட்டலும் — வினாவிடையும்
ஆரம்பம்:- **06 - 09 - 97** காலை 9-00 மணி.
முன்கூட்டி அனுமதிகளைப் பெறவும்.
(47394)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைவானுடன் பேச்சுக்கு சீனா விருப்பம் தெரிவிப்பு!

தைப்பேய், ஓக. 29

பகைமையை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக தைவானுடன் மீண்டும் பேச்சுவார்த்தையைத் தொடர விரும்புவதாக சீனா தெரிவித்துள்ளது.

தைவானின் தேசியக் கட்சியான காங்கிரஸ் கட்சியின் 15 ஆண்டுகால வெற்றிகளுக்கு வாழ்த்துத் தெரிவித்து சீனாவில் இருந்து அனுப்பப்பட்ட வாழ்த்துச் செய்தி ஒன்றிலேயே இந்த விருப்பத்தை சீனா வெளியிட்டிருப்பதாக தைவான் தேசியக் கட்சியின் பெண் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுவின் ஒப்பம் இடப்பட்ட அந்த வாழ்த்துச் செய்தி பீஜிங் தொலைத்தொடர்பு நிலையத்திலிருந்து அனுப்பப்பட்டிருப்பதாகவும் — அது உண்மையிலேயே கம்யூனிஸ்ட் கட்சியிடமிருந்து வந்ததா என்பது பற்றி ஆராயப்பட்டு வருவதாகவும் அப்பேச்சாளர் தெரிவித்தார்.

1949 ஆம் ஆண்டு ஏற்பட்ட சிவில் யுத்தத்தை அடுத்து தைவான் சீனாவில் இருந்து பிரிந்து சென்றது.

இரு நாடுகளுக்கும் இடையே தொடர்ந்து பதற்றம் நிலவி வந்தது. தைவான் சீனாவின் ஒரு மாகாணமே என்று சீனா கூறிவருகிறது.

அண்மையில் ஹொங்கொங் சீனாவிடம் கையளிக்கப்பட்டதைத் தொடர்ந்து தைவானும் சீனாவுடன் இணையும் காலம் நெருங்கி விட்டதாக சீனத் தலைவர்கள் தெரிவித்திருந்தனர். (ஐ)

# காஷ்மீர் எல்லையில் மோதலின்பின் அமைதி!

ஸ்ரீநகர், ஓக. 29

இந்திய பாகிஸ்தான் துருப்புகளுக்கிடையே நடைபெற்று வந்த மோதலின் பின் நேற்று முன்தினம் இரு தரப்பினருக்குமிடையே சிறு ஆயுத சண்டை, ஷெல் பரிமாற்றங்கள் நிகழ்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆயினும் நிலைமை கட்டுப்பாட்டினுள் உள்ளதாக இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

''நிலைமை பூரண கட்டுப்பாட்டிலுள்ளது'' என இந்தியாவின் ஜம்மு - காஷ்மீர் மாநில சிரேஷ்ட இராணுவ அதிகாரி அஷோக் கபூர் கூறினார்.

ஆயினும் சிறிய ஆயுதங்களைக் கொண்டு மோதல் பரிமாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. எவ்வாறாயினும் அச்சப்பட வேண்டிய அவசியம் கிடையாது. நாங்கள் எப்பொழுதும் விழிப்பாகவும். ஜாக்கிரதையாகவும் உள்ளோம் என அவர் மேலும் கூறினார்.

''ஹிமாலய பகுதியால் பிரிக்கப்படும் இரு நாட்டு எல்லைப்பகுதியைச் சுற்றியுள்ள 720 கிலோ மீற்றர் (445 மைல்) பகுதி பாதுகாப்பான நிலையில் உள்ளதுடன் அப்பகுதியை பூரணகட்டுப்பாட்டினுள்ளும் கொண்டுள்ளோம்'' என்று அவர் சொன்னார்.

முதல் 6 நாள்கள் இடம் பெற்ற கடுமையான சண்டையின் போது தமது தரப்பில் இரண்டு இராணுவத்தினரும், 3 சிவிலியன்களும் மாத்திரம் கொல்லப்பட்டதாகவும், பாகிஸ்தான் தரப்பில் 60முதல் 70 வரையானவர்கள்கொல்லப்பட்டுள்ளனர், அல்லது காயமடைந்துள்ளனர் என நம்புவதாகவும் இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

தமது தரப்பில் 4 சிவிலியன்கள் மாத்திரமே கொல்லப்பட்டுள்ளதாக தெரிவித்த பாகிஸ்தான் இந்தியா கணிப்பிட்டுள்ள புதிய தொகையை வன்மையாக மறுத்துள்ளது. (ஐ)

# கடும் மழையினால் பெரு வெள்ளம்; பாகிஸ்தானில் 37 பேர் மரணம்!

## இராணுவம் சேவைக்கு அழைப்பு

இஸ்லாமாபாத், ஓக. 29

பாகிஸ்தானில் லாகூரிலும் ஏனைய இடங்களிலும் பரவலாகப் பெய்த கடும் மழை காரணமாக பெரு வெள்ளம் ஏற்பட்டிருக்கிறது. இதுவரை 37பேர் உயிரிழந்து விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

வீடுகள் இடிந்து வீழ்ந்ததனால் அவற்றுள் சிக்குண்டே பலர் இறந்துள்ளனர். சுமார் 400 கிராமங்கள் மழையினாலும், வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்டுள்ளன. மீட்பு, நிவாரணப் பணிகளுக்காக அரசு இராணுவத்தை சேவைக்கு அழைத்துள்ளது. ராவல்பிண்டி நகரில் மோசமாகி வரும் வெள்ளப்பாதிப்புகளை அடுத்து பொதுமக்களை அங்கிருந்து வெளியேறும்படி அரசாங்கம் கேட்டிருக்கிறது.

கடந்த நூறு ஆண்டு காலத்தில் பாகிஸ்தானில் ஏற்பட்ட பெரும் மழை வீழ்ச்சி இது என்று வானிலை அவதானிகள் குறிப்பிட்டுள்ளனர்.

உலக அரங்கில்

# 'பாத் பைண்டர்' மீண்டும் செயற்படத் தொடங்கியது

நியூயோர்க், ஓக. 29

செவ்வாய்க் கிரகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட 'பாத் பைண்டர்' விண்கலத்தின் தானியங்கி 'ரோபோ' வாகனம் கடந்த சில நாள்களாகப் பாறையில் சிக்கி நகர முடியாமலிருந்ததாக அமெரிக்க 'நாஸா' விண்வெளி நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

அந்த வாகனம் கவிழும் நிலை ஏற்பட்டால் அது தானாகவே செயலிழக்கும் வகையில் உருவாக்கப்பட்டிருந்தது. அதனால் அது கடந்த 10 தினங்களாகச் செயற்படவில்லை என்று விஞ்ஞானிகள் கூறினர்.

தற்போது அந்த 'ரோபோ' வாகனம் மீண்டும் செயற்படத் தொடங்கியதை அடுத்து மீண்டும் அங்கிருந்து புதிய தகவல்களை அது பூமிக்கு அனுப்பத் தொடங்கியுள்ளது. (ஐ-5)

# வீரப்பனை அழைத்துவர இப்போதே ஒத்திகை!

சென்னை, ஓக. 29

பிரபல சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பன் சரணடைந்தால் அவரை எவ்வாறு பாதுகாப்பாக சென்னைக்கு அழைத்து வருவது என்பது குறித்து இப்போதே ஒத்திகை தொடங்கப்பட்டுள்ளது.

வீரப்பனையும் அவரது சகாக்களையும் ஹெலிகொப்ரர் மூலம் சென்னைக்கு அழைத்து வரும் ஒத்திகை நடவடிக்கை ஒன்றை அதிகாரிகள் பரீட்சித்துப் பார்த்துள்ளனர்.

சரணடையும் வீரப்பனின் உயிருக்குப் பல வழிகளில் ஆபத்து ஏற்படலாம் என அதிகாரிகள் அஞ்சுகின்றனர்.

சரணடைவதற்குப் புதிய நிபந்தனைகளை விதித்துள்ள வீரப்பன் தமிழக, கர்நாடக அரசுகளுக்கு 30 நாள் காலக்கெடு விதித்திருப்பது தெரிந்ததே. (ஐ)

# சுவீடன் பொலீஸார் முழு உஷார் நிலை!

ஸ்ரொக்ஹோம், ஓக. 29

சுவீடனில் தொடர்ச்சியாக விளையாட்டு அரங்குகளில் இடம் பெற்றுவரும் குண்டு வெடிப்புச் சம்பவங்களை அடுத்து முக்கிய நகரங்களில் பொலீஸ் நிலையங்கள் உஷார்ப்படுத்தப்பட்டுள்ளன.

2ஆயிரத்து 4ஆம் ஆண்டு சுவீடனில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளைத் தடுத்து நிறுத்தப் போவதாகக் கூறியுள்ள குழு ஒன்றே இத்தாக்குதல்களுக்கு உரிமை கோரியுள்ளது.

''சுவீடனைக் கட்டியெழுப்புவோர்'' என்று தம்மைத் தாமே அறிவித்துள்ள இக்குழுவினர் ஒலிம்பிக் போட்டிகள் ஆடம்பரமானவை என்றும், பெரும் நிதி விரயத்தை ஏற்படுத்துவன என்றும் தெரிவித்துள்ளனர். (ஐ)

## இந்தோனேசிய அதிபர் தேர்தல்

# 7 ஆவது தடவையாக சுஹார்ட்டோ போட்டி!

ஜகார்த்தா, ஓக. 29

இந்தோனேசியாவில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் சுஹார்ட்டோ 7 ஆவது தடவையாகப் போட்டியிடவுள்ளார்.

முன்னாள் இராணுவ ஜெனரலான சுஹார்ட்டோ கடந்த 30 ஆண்டுகளாக இந்தோனேசியாவை ஆண்டு வருகிறார்.

76 வயதான சுஹார்ட்டோவின் தேர்தல் வேட்பாளர் நியமனம் எதிர் வரும் ஒக்ரோபர் மாதம் அறிவிக்கப்படும் என்று ஆளும் கோல்கார் கட்சியின் தலைவர் தெரிவித்துள்ளார்.

சுஹார்ட்டோ மீண்டும் ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கப்படுவதை இராணுவம் மகிழ்ச்சியுடன் வரவேற்கும் என்று இராணுவத்தின் சமூக, அரசியல் விவகாரத் தலைவர் தெரிவித்துள்ளார்.

500 அங்கத்தவர்களைக் கொண்ட இந்தோனேசிய பிரதிநிதிகள் சபையில் பாதிப்பேர் மக்கள் ஆ[illegible] சபையின் அங்கத்தவர்கள் ஆவர். ஏனைய அரைவாசிப் பேரை அதிபர் சுஹார்ட்டோ நியமிப்பார். (ஐ)

# தி.மு.க. - த.மா.கா. உறவில் விரிசல்

சென்னை, ஓக. 29

தமிழகத்தில் தேர்தல் கூட்டணி அமைத்து வெற்றியீட்டிய திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும்—தமிழ் மாநில



கருணாநிதி

காங்கிரஸுக்கும் இடையே முன்னெப்போதும் இல்லாத வகையில் விரிசல் ஏற்பட்டிருப்பதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

தி.மு.க. ஆட்சிக்கு எதிராக மூப்பனார் தலைமையிலான தமிழ் மாநில காங்கிரஸ் மேற்கொண்டு வரும் பிரசாரங்களை முறியடிக்க உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு முதல்வர் கருணாநிதி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

''அமைச்சர் சிதம்பரம் உட்பட பலர் தி.மு.க. அரசு மீது வசைமாரி பொழிகின்றனர்.''—என்று அவர் தெரிவித்துள்ளார்.


இந்த நிலையில் த. மா. காவின் பொய்ப் பிரசாரங்களை முறியடிப்பதற்குதமிழ் நாடு எங்கும் பிரசாரங்களை [illegible] நிதி உத்தரவிட்டிருக்கிறார்.

கருணாநிதியின் இந்த நிலைப்பாடு தொடர்பாக த.மா.கா. தலைவர் ஜீ.கே. மூப்பனார் கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை. ஆனால் அவரது தொண்டர்கள் ஆத்திரமடைந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

அடுத்த தேர்தலில் தமிழகத்தில் த.மா.காவேதனித்து ஆட்சி அமைக்கும் என்றும்-முப்பனாரே அடுத்தமுதல்வர் என்றும் மத்திய நிதி அமைச்சர் ப. சிதம்பரம் தொடர்ந்து கூறிவருகிறார்.

தற்போதைய கருத்து மோதல்தொடர்பாகஇரண்டு கட்சிகளுமே சற்றுக் கடுமையான போக்கைக் கடைப்பிடித்து வருகின்றன.

தற்போதைய நிலையில்தத் தமது நிலைப்பாடுகளைப் பகிரங்கமாக அறிவிக்கும் இறுதி



மூப்பனார்

முடிவுகளை இரண்டு கட்சிகளும் விரைவில் தீர்மானிக்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# சிஹானுக் இன்று கம்போடியா திரும்புகின்றார்!

பீஜிங், ஓக. 29

கடந்த ஆறுமாத காலமாக சீனாவில் மருத்துவ சிகிச்சை பெற்றுவந்த கம்போடிய மன்னர் நொரடோம் சிஹானுக் இன்று வெள்ளிக்கிழமை நாடு திரும்புவார் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

உள்நாட்டு அரசியல் நெருக்கடிக்குப் பின் மன்னர் தாயகம் திரும்புவது அரசியல் மாற்றங்களை ஏற்படுத்தலாம் என அவதானிகள் கருதுகின்றனர்.

கம்போடியாவில் தற்போது அதிகாரத்தில் உள்ள இரண்டாவது பிரதமர் ஹுன் சென் அண்மையில் சீனா சென்று மன்னர் சிஹானுக்கைச் சந்தித்திருந்தார்.

தமது புதல்வரும், முதலாவது பிரதமருமான ஹுன் சென் மீண்டும் பதவியில் அமர்த்தப்படும் வரை தாம் நாடு திரும்பப் போவதில்லை என மன்னர் சிஹானுக் முன்னர் கூறியிருந்தார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

ஜன்மர் என்ஜின் (30 கோஸ் பவர்) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: றியல் வீடியோ வித்தனையடி, உடுப்பிட்டி றோட், வல்வெட்டித்துறை.
[சி/1393]

வேம்பு, பூவரசு, இப்பிலிப் பிலி முதலிய விறகுகளும், வைரமான பனைமரங்களும், மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். திருமதி செல்லம்மா, 16/5, சீனியர் லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
[49227]

அல்சேசன் ஜேர்மன் ஷெப்பேர்ட் நல்ல இன நாய்க் குட்டிகள் (கிருமி நீக்கப்பட்டவை) 5 கிழமை, கறுப்பும் சாம்பலும் கலந்த நிறம், நீண்ட மயிர், 2 ஆண், 1 பெண் விற்பனைக்குண்டு. பார்வதிவாசா, சரஸ்வதி வித்தியாலய வீதி, கரவெட்டி.
(சி–1424)

## பிரத்தியே கவகுப்பு

பௌதிகவியல் புலங்கள் வகுப்பில் பங்குகொள்ள விரும்புபவர்கள் ஸ்பெல்மன், 18, மத்தியூஸ்றோட், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும். ஆரம்பம்: 31–08-97. நேர அட்டவணை நேரில் பெற்றுக் கொள்ளலாம்.
[49268]

## றோணியோ

தமிழ், ஆங்கில தட்டச்சு றோணியோ வேலைகள் சிறந்த முறையில் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள பொஸ்கோ றோணியோ (பொஸ்கோ பாடசாலைமுன்பாக) ஸ்ரென்சில் கட்டிங் 10/–.
[49269]

## நாடகம் எழுதுவதுஎப்படி

என்று விளக்கிக் கூறுகின்ற முதலாவது தமிழ் நூல் அக்கரைச்சீமையில். இலங்கை-இங்கிலாந்து நாவல். மலிவு விலையில் ரூபா 25. அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை எழுதியவை; பரிசளிப்பதற்கு ஏற்றவை.
]49523]

## நூலகவாரம்

வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான். மாணவமணிகளே! மில்க்வைற் நீல சோப் சலவைத்தூள் 10 உறைகள் அனுப்பி அறிவு நூல்கள், மில்க்வைற் செய்தி பெற்றுக் கொள்ளுங்கள்.
(சி-1423)

## தவறிவிட்டது

சிவபாதசுந்தரம் குமுதினி என்பவரின் 706840494 V இலக்க தேசிய அடையாள அட்டையும், அத்துடன் பல்கலைக்கழக விசேட அடையாள அட்டைகளும் நல்லூர் கோயிலில் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 15/14 A, சங்கிலியன் வீதி, நல்லூர் எனும் முகவரியில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.
[49273]

நடராஜா இராஜேஸ்வரி என்பவரின் 506650348 V இலக்க தேசிய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 281, பலாலி வீதி, ஆலடிச் சந்தி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும்.
[49272]

# சுகநலக் கண்காட்சி நல்லூரில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக. 29
நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவத்தை ஒட்டி யாழ். மாநகர சுகாதாரப் பகுதியினரால் நடத்தப்படும் சுகநலக் கண்காட்சி நல்லூர் ஆலயச் சூழலில் நேற்று மாலை 3 மணிமுதல் ஆரம்பமானது.

நல்லூர் கோயிலுக்கு கிழக்குப் பக்கமாக பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள தாய் சேய் நல நிலையத்திலும், சித்த வைத்திய பிரிவிலும் இக் கண்காட்சி தொடர்ந்து அடுத்த மாதம் 7ஆம் திகதி வரை நடைபெறும்.

இது தொடர்பாக யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன் விடுத்துள்ள பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நல்லூர் உற்சவ காலத்தில் எமது பிரிவினால் நடத்தப்படும் மேற்படி கண்காட்சி இவ்வருடமும் வழமைபோல் நடைபெற உள்ளது. எமது பகுதிகளில் காணப்படும் பெரும்பாலான நோய்கள், சுகாதாரமான நடத்தை பேணுவதாலும், சூழல், உணவு முறைகளை கடைப்பிடிப்பதனாலும் தடுக்கக் கூடியவை. அத்துடன் அண்மைக் காலங்களில் சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்களினால் சில புதிய நோய்களுக்கும் (எய்ட்ஸ்) முகங்கொடுக்க வேண்டியுள்ளது.

இவற்றையெல்லாம் தடுக்க இந்நோய்கள் சம்பந்தமான அறிவு சமூகத்தில் பரவியிருத்தல் வேண்டும். இம்முறை இவற்றை அடிப்படையாகக் கொண்டு எமது கண்காட்சி தயாரிக்கப்பட்டுள்ளது. பல்வேறு பகுதிகள் அடங்கிய கண்காட்சி எமது வெளிக்கள சுகாதார ஊழியர்களின் பங்களிப்புடன் மாணவ, மாணவிகளுக்கும், பொது மக்களுக்கும் ஏற்றவிதமாக வழங்கப்படுகின்றது.

தினமும் காலை 8–00 மணி முதல் மாலை 5-30 மணி வரை திறந்திருக்கும் இக்கண்காட்சியை கண்டு பயன்பெறுமாறு சகலரையும் அழைக்கின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## திருப்புகழ் முற்றோதல்

யாழ்ப்பாணம், ஓக. 29
நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவத்தை ஒட்டி அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் கந்தர்மடம் ஆத்திசூடி வீதி, சித்தி விநாயகர் ஆலயத்தில் தினமும் திருப்புகழ் பாடல்களை முற்றோதல் செய்து வருகின்றனர். இந் நிகழ்வில் சங்கீத பூஷணம் எஸ். கணபதிப்பிள்ளை, தேவார இசைமணி எஸ். ஆர். திருஞானசம்பந்தன், வேலணையூர் பொ. சிவபாதசுந்தரம் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.
(ஐ)

# சாவகச்சேரி ஆஸ்பத்திரியை அபிவிருத்தி செய்யக் குழு!

தென்மராட்சி, ஓக. 29
சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையை அபிவிருத்தி செய்வதற்கான ஆலோசனைச்சபை ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இச் சபை மூலம் வைத்தியசாலையின் அபிவிருத்தி பிற தேவைகள் பற்றி பொதுமக்களின் ஆலோசனைகளைப் பெறவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்படி ஆலோசனைச் சபை அங்குரார்ப்பணக் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறவுள்ளது.

வைத்தியசாலையின் வளர்ச்சியில் அக்கறையுள்ள பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள், நலன்விரும்பிகள் அனைவரும் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.
(ஐ-117)

# உரும்பிராய் மின் வசதியை விஸ்தரிக்குமாறு கோரிக்கை

கோண்டாவில், ஓக. 29
உரும்பிராய்ப் பகுதிக்கான மின்சார விநியோகம் விஸ்தரிக்கப்பட வேண்டும் என்றும், உரும்பிராய் - பலாலி பிரதான வீதியில் உள்ள வீடுகளுக்கு மின்சார வசதி கிடைக்க வேண்டும் என்றும் உரும்பிராய் ஞானவைரவர் கோயிலடி பொது அமைப்புக்களின் இணையம் கோரியுள்ளது.

தற்போது பல குடியிருப்பாளர்களுக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை. பொருத்தமான அளவில் புதிய ஜெனரேற்றர் மூலம் மின்சாரப் பாவனையாளர்கள் அனைவருக்கும் மின்சார விநியோகம் செய்யப்பட வேண்டும் என்று மேற்படி இணையம் கேட்டுள்ளது.

மேற்படி இணையத்தில் ஞானவைரவர் கோயில் தேவஸ்தானம், ஞானவைரவர் கோயிலடி சனசமூக நிலையம், ஞானவைரவர் கோயில் தொண்டர் சபை, உரும்பிராய் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம், உரும்பிராய் றோட்டறிக் கிராமியக்குழு, ஒஸ்கா விளையாட்டுக் கழகம் ஆகியன அங்கம் வகிக்கின்றன.
(ஐ-71)

## ஏழாலை அ. அட்டை விநியோகம்

யாழ்ப்பாணம், ஓக. 29
ஏழாலை மத்தி [ஜே-206] கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கான விசேட அடையாள அட்டைகள் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஏழாலை மேற்கு (ஜே-201) கிராம அலுவலர் பணிமனையில் வைத்து வழங்கப்படவுள்ளன. (ஐ)

## உரும்பிராயில் திருட்டுக்கள்

உரும்பிராய்ப் பகுதியில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

உரும்பிராய் இந்துக்கல்லூரி வீதியில் உள்ள ஒரு வீட்டில் பகல் நேரத்தில் கதவுப் பூட்டை உடைத்துப் புகுந்த திருடர்கள் றேடியோ முதலிய பெறுமதி மிக்க பொருள்களை எடுத்துச் சென்றுள்ளனர்.

ஒருவாரத்திற்கு முன்பு கற்பகப்பிள்ளையார் கோயில் வீதியிலுள்ள கடை ஒன்று இரவு நேரத்தில் உடைக்கப்பட்டு பெறுமதியான பொருள்கள் கொள்ளையிடப்பட்டன. (ஐ – 154)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

## இளையதம்பி சுப்பிரமணியம்

தோற்றம்: **30 - 01 - 1910**
மறைவு: **30 - 07 - 1997**

வீட்டுக் கிருத்தியம்
29 – 08– 1997 – வெள்ளிக்கிழமை

எமது குடும்பத்தலைவரின் மறைவையொட்டி அனுதாபச் செய்தி அறிவித்தவர்களுக்கும், நேரில் வந்து மரணச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், மரணச் சடங்கின் போது பல்வேறு உதவி செய்தவர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்ம சாந்திக்காக 29 - 08 - 97 வெள்ளிக்கிழமை நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்தில் கலந்து கொள்ளுமாறும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

த. யோகரராசா,
25/10, செம்மணி ஒழுங்கை,
அரியாலை.
(43225)

# 5-ம் ஆண்டு நினைவலைகள்

## செல்வன் பாக்கியதுரை உதயகுமார்

[29 - 08 – 92 அன்று மானிப்பாய் சந்தையடியில் கொடூரமான முறையில் கொலையுண்டவர்]

மலர்வு; **30 - 06 - 1970**
உதிர்வு: **29 - 08 – 1992**

அன்பின் வடிவு நீ அறத்தின் படிவு நீ
குன்றின் தீபமாய் குலவிய உதயா!
இன்று நீ பிரிந்து ஐந்தாண்டு சென்றாலும்
என்றும் ஆறாது எம் துயர்.

மகனே! நீ எம்மை விட்டுப் பிரிந்து 5 ஆண்டுகள் ஒழிந்தன. ஆனால் எம் கண்களில் உன் உருவம்; ஓடி எம்நெஞ்சில் உன் நினைவு கூடவே இருக்கின்றது-ஐயா! எம் சோகத்தைச் சொல்ல சொற்களுக்கு வலிமையில்லை. எதற்கும் காலம் ஒரு நாள் பதில் சொல்லும்.

உன் ஆத்மா சாந்தியடைய தினமும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

'' அமரவாச '',
சங்கரப்பிள்ளை வீதி,
மானிப்பாய்.
(49078)


# 6 பாதுகாப்பு அதிகாரிகள் தமக்கு தேவை என்கிறார் புதிய எம்.பி

திருகோணமலை மாவட்ட ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்றுள்ள ஆரியபால தமது தனிப்பட்ட பாதுகாப்புக்கு ஆறு பாதுகாப்பு அதிகாரிகளைத் தருமாறு பொலீஸ் மாஅதிபரிடம் கேட்டுள்ளார்.

தமது பாதுகாப்புக்கு இது வரை எவரும் தரப்படவில்லை என்றும்— உடனடியாக 6 பாதுகாப்பு அதிகாரிகளை தந்துதவுமாறும்— பொலீஸ்மா அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் அவர் கேட்டுள்ளார்.

படுகொலை செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மஹ்ரூப்பின் இடத்துக்கு இவர் நியமிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.
(இ–150-3)

# காணாமற் போனோரின் குடும்ப உறுப்பினர்களுக்கு நிவாரணம்

## விவரங்கள் செயலகத்தால் சேகரிப்பு

1995 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கையின் பின்னர் காணாமற்போனவர்களின் குடும்பங்களில் வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ளவர்களுக்கு நிவாரணம் வழங்க யாழ். செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பான விவரங்களைச் சேகரிக்க பிரதேச செயலகங்களுக்கு மாதிரிப் படிவங்கள் செயலகத்தால் அனுப்பப்பட்டுள்ளன.

காணாமற் போனோரின் குடும்ப நிலையைக் கருத்திற் கொண்டு உலர் உணவு நிவாரணம், பொதுசன மாதாந்த உதவி, சுய தொழிலுக்கான உபகரணம் வழங்கல் ஆகிய திட்டங்களின் கீழ் உதவி வழங்கப்படும்.

காணாமற் போனோரின் குடும்பத்தில் உள்ள எவராவது வேலை வங்கியில் பதிந்திருந்தால் அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வசதியாகவும் விவரங்கள் கோரப்பட்டுள்ளன. (ஐ–3)

## சிறுவர் விளையாட்டு விழா

எழுதுமட்டுவாழ் அறவழி சிறுவர் சோலையின் விளையாட்டு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு சிறுவர் சோலை மைதானத்தில் டாக்டர் தா. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறும். முதன்மை விருந்தினராக உசன் இராமநாதன் மகாவித்தியாலய அதிபர் ஐ. வரதராசாவும், சிறப்பு விருந்தினர்களாக எழுதுமட்டுவாழ் கணேசா வித்தியாலய அதிபர் சி.வேலாயுதபிள்ளை, அறவழிச் செயலக நிர்வாக உத்தியோகத்தர் வே. பாலசுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொள்வர். (ஐ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். நீதிமன்றில் ஆவணங்கள் சிங்களத்தில்; ஐ. நா. அதிகாரியிடம் சட்டத்தரணிகள் ஆட்சேபம்!

## மனித உரிமை மீறல் எனத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 29

''இலங்கையில் தமிழ் மொழியும் அரச கருமமொழியாக இருந்த போதும், தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் யாழ். மாவட்டத்தில் உள்ள நீதிமன்றங்களில் சிங்கள மொழி மூலமே ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன. இது அடிப்படை மனித உரிமை மீறல் செயலாகும்.''

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள மனித உரிமைகளுக்கான ஐ. நா. ஆணைக்குழுவின் விசேட தொடர்பாளர் பார்க்வலி நிடியேவிடம் யாழ். மாவட்ட சட்டத்தரணிகள் சங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தது.

நேற்று யாழ். நீதிமன்றத்துக்கு அவர் விஜயம் செய்த போது அவருடன் நடந்த கலந்துரையாடலின் போதே சட்டத்தரணிகள் மேற்கண்ட ஆட்சேபனையைத் தெரிவித்தனர்.

அவருடன் மனித உரிமைகளுக்கான ஐ.நாவின் நிலைய மனித உரிமை அலுவலர் கரீம் ஜுரோவி, ஐ. நா. அபிவிருத்தித் திட்ட அதிகாரியான எம். சி. எம். இக்பால் ஆகியோரும் உடன் வந்திருந்தனர்.

சட்டத்தரணிகள் எஸ். பரமராஜா, எஸ். என். விஸ்வலிங்கம், ஆர். ரி. விக்கினராஜா, எஸ். கோடீஸ்வரன் ஆகியோர் இங்குள்ள பிரச்சினைகளை அவர்களுக்கு எடுத்து விளக்கினர்.

அவர்கள் தெரிவித்த விடயங்கள் வருமாறு:-

★ யாழ். மாவட்டத்தில் உள்ள நீதிமன்றங்களில் சிங்கள மொழி மூலம் முக்கிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படுவதால், வழக்கின் செயற்பாடுகளை மக்கள் உணர முடியாமல் உள்ளது. ஆகவே நீதிமன்றங்களில் போதிய அளவு மொழிபெயர்ப்பாளர்களை நியமிக்க வேண்டும்.

★ யாழ். மாவட்டத்தில் உள்ள பொலீஸ் நிலையங்களில் தமிழ்மொழி அறிவுடையவர்கள் நியமிக்கப்பட வேண்டும். மக்கள் தெரிவிக்கும் முறைப்பாடுகளை முறைப்படி பதியமுடியாத நிலை உள்ளது. மக்களால் தெரிவிக்கப்படும்முறைப்பாடுகளை முறைப்படி பதிவு செய்ய வசதிகள் செய்து தரப்பட வேண்டும்.

★ நீதிமன்றங்கள் சிறிய சிறிய கட்டடங்களில் வசதியற்ற நிலையில் இயங்குகின்றன. வசதிகளுடன் கூடிய கட்டடங்கள் அமைக்கப்பட வேண்டும்.

★ யாழ்ப்பாணத்தில் மேல் நீதிமன்றம் செயற்படாததால், மக்கள் மேல் நீதிமன்ற வழக்குகளுக்காகக் கொழும்புக்குச் சென்று அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். ஆகவே யாழ்ப்பாணத்தில் மேல் நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டும்.

★ நீதிமன்றங்களில் நிலவும் தளபாடப்பற்றாக்குறை, காகிதாதிகள் பற்றாக்குறை ஆயனவற்றை நீக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

★ யாழ்ப்பாணத்தில் சட்டநூலகம் இல்லை. இதன் காரணமாக சட்டப் புத்தகங்களைப் படிக்க வாய்ப்பு இல்லாத நிலை உருவாகியுள்ளது. (ஐ-3)

## நெற்செய்கை கடன் உதவி

சங்கானைப் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் தனது சங்க அங்கத்துவ விவசாயிகளுக்கு காலபோக நெற்செய்கை கடன் வழங்குவதற்கான விண்ணப்பங்களைக் கிளைகளினூடாகக் கோரியுள்ளது.

ஒவ்வொரு விவசாயிக்கும் மூவாயிரத்து ஐந்நூறு ரூபா கடனாக வழங்கப்படவுள்ளது. (ஐ-12)

## காயம்

யாழ்ப்பாணம், ஓக. 29

ஓடிக்கொண்டிருந்த மினி பஸ்ஸின் மிதி பலகையில் இருந்து தவறிக் கீழே விழுந்து ஒருவர் படுகாயமடைந்தார்.

ஆனைக்கோட்டை, மூன்றாம் கட்டையடிப்பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற இச் சம்பவத்தில் மானிப்பாயைச் சேர்ந்த வேலாயுதம் சிவகுமார் (வயது 32) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து மூளாய் நோக்கிச் சென்றுகொண்டிருந்த அந்த மினி பஸ்ஸில் பயணிகள் நெருக்கடியால் மிதி பலகையில் நின்ற இவர் தவறி விழுந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-15)

## சமய சந்நிதிகளில்

இருபாலை கேணிக்குளம் பதி அருள்மிகு லிங்கப்பிள்ளையார் (பழம் பிள்ளையார்) தேவஸ்தான மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறும். மஹோற்சவத்தை முன்னிட்டு பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் தினமும் மாலை 5.30 மணிக்கு தெய்வீகச் சொற்பொழிவாற்றுவார்.

★ ★ ★

நெல்லிப்பழை- காசி விநாயகர் தேவஸ்தானத்தின் 26ஆவது ஆண்டு மணவாளக் கோல உற்சவம் நாளை சனிக்கிழமை நண்பகல் அஷ்ஷோத்தர சங்காபிஷேகம், பஞ்சமுகார்ச்சனை என்பவற்றுடன் நடைபெறும்.

★ ★ ★

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் ஆச்சிரம மண்டபத்தில் வாராந்தம் நடைபெற்றுவரும் நிகழ்வுகளில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கம்பர்மலை கே. இராமநாதனின் பக்திப்பாடல்கள் நிகழ்ச்சி இடம்பெறும். (ஐ)

★ ★ ★

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீநர்த்தனவிநாயகர் ஆலயத்தில் அலங்கார உற்சவம் ஆரம்பமாகியுள்ளது. தொடர்ந்து பத்து நாள்களுக்கு விநாயகப் பெருமான் வீதி உலாவும் இடம்பெறும்.


உ

சாவகச்சேரி

அருள்மிகு

ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்

மஹா கும்பாபிஷேக விழா

அன்புடையீர்!

கிரியாரம்பம்: 30 - 08 - 97

சனி காலை 8 மணி

எண்ணெய்க்காப்பு: 04 - 09 - 97

வியாழன் காலை 7 மணி – மாலை 5 மணி

கும்பாபிஷேகம்: 05 - 09 - 97

வெள்ளி காலை 6. 52-8. 04 மணி

அனைவரும் வருக! அன்னை அருள் பெறுக!

[49281] சுபம்!


# மீசாலை வரை மின் விநியோகத்தை விஸ்தரிக்குமாறு கோரி மகஜர்

தென்மராட்சி, ஓக. 29

சாவகச்சேரியிலிருந்து ஜெனரேற்றர் மூலம் வழங்கப்படும் மின்சார விநியோகத்தை மீசாலைப் பகுதிவரை நீடிக்குமாறு இப் பகுதியைச் சேர்ந்த மக்கள் சாவகச்சேரி மின்சார சபை மின் அத்தியட்சகரையும், தென்மராட்சிப் பிரதேச செயலரையும், வடமாகாண மின் பொறியியலாளரையும் மகஜர் மூலம் கேட்டுள்ளனர்.

மீசாலைப் பகுதியில் சுமார் ஆயிரம் மின் பாவனையாளர்களுக்கு சாவகச்சேரி நகர சபையினரால் முன்னர் மின்சாரம் விநியோகிக்கப்பட்டதாகவும், தற்போது ஜெனரேற்றர் மூலம் வழங்கப்படும் மின்சாரம் சங்கத்தானை பெரிய அரசடி வரையே வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை—சாவகச்சேரி ஜெனரேற்றர் மூலம் வழங்கப்படும் மின்விநியோகம் மீசாலை மடத்தடிவரை விஸ்தரிக்கப்படுவதற்கான பணிகள் நடைபெறுவதாகவும், மீசாலைப் பகுதிக்கென தனியாக 50 கே. வி. வலுவுள்ள ஜெனரேற்றர் ஒன்றைக் கொழும்பிலிருந்து தருவிக்க இலங்கை மின்சார சபை நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் தெரியவருகிறது. (ஐ-117)

## கொடிகாமத்தில் கண் சிகிச்சை

நல்லூர், ஓக. 29

சாவகச்சேரி லயன்ஸ் கழகம் இந்தமாத இறுதியில் கண் சிகிச்சை முகாம் ஒன்றைக் கொடிகாமத்தில் நடத்தவுள்ளது.

கண் பரிசோதனை செய்து கண் சத்திர சிகிச்சை செய்வதற்கு நோயாளருக்கு உதவிகள் அளிக்கப்படும். இந்தச் சிகிச்சை முகாமின் போது இரத்த அழுத்தப் பரிசோதனையும் செய்யப்படும். (ஐ-103)

## பருத்தித்துறை விவசாயிகளுக்கு மண்வெட்டி

உலக உணவு ஸ்தாபனத்தின் உதவியின் கீழ் வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட விவசாயிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரம், தெளிகருவி, மண்வெட்டி ஆகியன வழங்கப்படவுள்ளன.

இப்பொருள்கள் தெரிவு செய்யப்பட்ட தகுதியான விவசாயிகளுக்கு மாத்திரமே வழங்கப்படும் என பருத்தித்துறை பிரதேச செயலப் பிரிவு திட்டமிடல் உதவித் பணிப்பாளர் தெரிவித்தார். (ஐ-15)


ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு:
14 - 02 - 1917

உதிர்வு:
09 - 09 - 1996

அமரர் சிவப்பிரகாசம் இரத்தினம்மா

திதி: 29-08-1997

பண்பின் உறைவிடமாய் பாசத்துடன் எமை வளர்த்து
ஆளாக்கிய அன்புத்தாயே!
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றாலும்
உங்கள் நினைவு எங்கள் நெஞ்சை விட்டகலாது
அம்மா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

''திருநந்தனம்'',
ஈவினை மத்தி,
புன்னாலைக்கட்டுவன். (49282)


# வவுனிக்குளம் தேவாலயத்துக்கு சேதமில்லை என படையினர் மறுப்பு!

கொழும்பு, ஓக. 29

வவுனிக்குளம் பகுதியில் கடந்த 15ஆம் திகதி 'கிபிர்' விமானங்கள் நடத்திய குண்டு வீச்சினால் அங்குள்ள தேவாலயத்துக்கு எவ்வித சேதங்களும் ஏற்படவில்லை என்று இலங்கை விமானப் படை தெரிவித்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக வெளியிட்ட ஓர் அறிக்கையிலேயே விமானப்படை இந்த மறுப்பைத் தெரிவித்துள்ளதாக ''திவயின'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

குறிப்பிட்ட பகுதியில் அமைந்திருந்த புலிகளின் இலக்குகள் மீது இம் மாதம் 7 ஆம் திகதியும், 10ஆம் திகதியும் வான் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. அச் சமயம் அங்கு பொதுமக்கள் எவரும் இருக்கவில்லை. அப்படியானால் பின்னர் 15 ஆம் திகதி அப்பகுதி மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட போது மட்டும் அப்பகுதிக்குப் பொதுமக்கள் எவ்வாறு வந்தனர் என விமானப்படையின் அறிக்கையில் கேள்வி எழுப்பப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனிக்குளத்தில் உள்ள இந்த தேவாலயச் சுற்றாடலில் 'கிபிர்' விமானங்கள் நடத்தியகுண்டுவீச்சில் ஆலய சூழலில் குடிசை அமைத்துத் தங்கியிருந்த அகதிகள் 9பேர் பலியானதும், 15 பேர்வரை படுகாயமடைந்ததும் தெரிந்ததே. (ஐ-10)


கோப்பாய் வாகன சுத்திகரிப்பு நிலையம்

எமது தொழில் ஸ்தாபனம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

(49240)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு நோயாளர் வருகை அதிகரிப்பு

தென்மராட்சி, ஓக. 29

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் புதிதாக இரண்டு வைத்திய அதிகாரிகள் கடமையேற்றுள்ளனர். இதனையடுத்து ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பிரிவுக்கு நாளாந்தம் வரும் நோயாளர்களின்எண்ணிக்கை கடந்த மாதங்களைவிட அதிகரித்துக் காணப்படுகிறது. தினமும் வழமையை விட இருநூறுக்கும் மேற்பட்டோர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாக ஆஸ்பத்திரி புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

தென்மராட்சிப் பிரிவின் பல பகுதிகளிலிருந்தும் இவ் ஆஸ்பத்திரிக்கு நோயாளர்கள் வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

# கோப்பாய் விவசாயிகளுக்கு 4 ஆயிரம் மண்வெட்டிகள்

உரும்பிராய், ஓக. 29

உலக உணவு விவசாய நிறுவனத்தினால் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள 2,500 விவசாயக் குடும்பங்களுக்கும் 2,000 விவசாயக் கூலிகளுக்குமாக மொத்தம் 4 ஆயிரம் மண் வெட்டிகள் வழங்கப்படவுள்ளன.

கிராமசேவை உத்தியோகத்தர் பிரிவுகள் தோறும் இயங்கும் விவசாய சம்மேளனங்களினால் தயாரிக்கப்பட்டு அவ்வப்பகுதி கிராமசேவை உத்தியோகத்தர்களினால் உறுதிப்படுத்தப்படுத்தப்பட்ட பட்டியலின் படி இவை விநியோகிக்கப்படும்.

வறுமைக்கோட்டுக்குக் கீழேயுள்ள குடும்பங்களாகவும், இதற்குமுன்பு உருளைக்கிழங்கு, வெங்காயம் ஆகியவற்றுக்கான மானியம் பெறாதவர்களாகவும், 'கெயர்' ஸ்தாபனத்தினால் மண்வெட்டி வழங்கப்படாதவர்களாகவும், விவசாய மற்றும் கூலித்தொழிலை மட்டுமே நம்பியுள்ளவர்களாகவும், 'உ' பங்கீட்டு அட்டை இல்லாதவர்களாகவும் உள்ளவர்கள் மட்டுமே இதற்கான பயனாளிகள் பட்டியலில் இடம்பெற வேண்டும் என கோப்பாய் பிரதேச செயலர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

(ஐ-154)

## கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 29

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் கந்தர்மடம் ஆத்திசூடி வீதி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் கடந்த ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் நடத்தி வந்த பன்னிரு திருமுறை முற்றோதல் கடந்த வாரம் பூர்த்தியடைந்தது.

முற்றோதல் நிகழ்வில் தினமும் சிறப்புறப் பங்காற்றிய வேலணையூர் பொ. சிவபாத சுந்தரம் இறுதி நாளன்று பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

(ஐ)

## அஞ்சல்துறை அத்தியட்சகர் நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஓக. 29

யாழ். மாவட்ட பெரும்பாக அஞ்சல் அத்தியட்சகர் பதவிக்கான நேர்முகப் பரீட்சைகள் கொழும்பில் கடந்த வாரம் இடம்பெற்றன.

யாழ். மாவட்ட பதில் பெரும்பாக அஞ்சல் அத்தியட்சகரும், ம வட்ட நுண்ணாய்வு பரிசோதகருமான சி. தர்மராஜன், யாழ். பிரதம தபாலதிபர் சு. கோடீஸ்வரன் ஆகியோர் இந்தநேர்முகப்பரீட்சையில் தோற்றினர்.

(ஐ-3 )

# மந்திகை ஆஸ்பத்திரியில் ஊழியரின் சைக்கிள்கள் திருட்டு

மந்திகை மருத்துவ மனையில் கடந்த இருவார கால இடைவெளியில் மூன்று ஊழியர்களது சைக்கிள்கள் திருடப்பட்டுள்ளன.

வைத்தியசாலையிலுள்ள ஊழியர்களின் சைக்கிள் நிறுத்தும் பகுதியிலிருந்தேஇம் மூன்று சைக்கிள்களும் களவாடப்பட்டுள்ளன.

இவ் வைத்தியசாலையில் பணிபுரியும் 'எக்ஸ்றே' இயக்குநர், உணவு வழங்கல் பதிவு எழுதுநர், சுகாதாரத் தொழிலாளி ஆகியோரது சைக்கிள்களே திருடர்களின் கைவரிசைக்கு இலக்காகியுள்ளன.

(ஐ-109)

# மதுவரிப் பாதுகாவலர் நேர்முகப் பரீட்சை இன்று

கொழும்புத்துறை, ஓக. 29

மதுவரிப் பாதுகாவலர் பதவிக்கு ஆள்களைச் சேர்ப்பதற்காக கடந்த திங்களன்று நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கத் தவறியோரை இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ள நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்குமாறு வடபிராந்திய மதுவரி திணைக்கள உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

''இலக்கம் 125, பருத்தித்துறை வீதி, நல்லூர்'' என்னும் முகவரியில் உள்ள உதவி மதுவரி ஆணையாளர் அலுவலகத்தில் இந்த நேர்முகப் பரீட்சை நடைபெறும்.

இதேவேளை யாழ்ப்பாணம் தவிர்ந்த பிற மாவட்டங்களில் மேற்படி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோரில் போக்குவரத்து வசதி கிடைக்காததால் சமுகளிக்க முடியாமற்போன பரீட்சார்த்திகளும் இன்று நடைபெறும் நேர்முகப்பரீட்சைக்கு சமுகமளிக்கலாம் என்றும் –

நேர்முகப் பரீட்சைக்கு வருவோர் அடையாள அட்டை, கல்வித் தகைமைச் சான்றிதழ், பிறப்பு அத்தாட்சிப் படிவம், விளையாட்டுத் துறைத் தகைமைகள் ஆகியவற்றின் மூலப் பிரதிகளைத் தம்முடன் கொண்டு வர வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ–30)

## நல்லூருக்கு விசேட பஸ் சேவை

தென்மராட்சி, ஓக. 29

நல்லூர் கந்தசுவாமி கோயில் தேர் உற்சவத்தையொட்டி எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் விசேட மினிபஸ் சேவைகள் சாவகச்சேரி பஸ் நிலையத்திலிருந்து நடத்தப்படுமென தென்மராட்சி சிற்றூர்தி சேவைகள் சங்கம் அறிவித்துள்ளது.

தேர், தீர்த்த உற்சவ தினங்களில் காலை 6.00 மணி தொடக்கம் 15 நிமிடத்திற்கு ஒருதடவை மினிபஸ் சேவை நடத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-111)

டொனால்ட் கிண்ணம்:

# விறுவிறுப்பான கிரிக்கெட் ஆட்டம்; கொக்குவில் கழக அணி வெற்றி!

யாழ்ப்பாணம், ஓக. 29

'டொனால்ட் கணேசகுமார்' வெற்றிக்கிண்ணத்துக்காக யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் - எட்டாவது வருடாந்த - தோற் பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டிகள் கடந்த வாரம் ஆரம்பமாகின.

கடந்த வாரம் மூன்று ஆட்டங்கள் நடைபெற்றன. முடிவுகள் வருமாறு:-

**கிறாஸ் கொப்பர்ஸ் எதிர் ஜொலி ஸ்ரார்ஸ்**

கிறாஸ் கொப்பர்ஸ், ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான முதலாவது ஆட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார்ஸ் அணி 49.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 301 ஓட்டங்களைப் பெற்றது. இது இந்த ஆட்டத் தொடரின் உச்ச ஓட்டங்களாகும். எஸ். கார்த்திக் — 65, எஸ். பிரதீபன் — 35, பி. முருகவேள் —31, ஆர். ஜெயந்திரன் — 28, எஸ். தயாளன் — 24, எஸ். நாதன் ஆட்டமிழக்காமல் — 53 ஓட்டங்களைப் பெற்றனர். ரி. பிரபாகரன் 44 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

தொடர்ந்து ஆடிய கிறாஸ் கொப்பர்ஸ் அணி 15.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 60 ஓட்டங்களைப்பெற்றது. எஸ்.கோகுலபாலன் 20 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். எஸ். நாதன், எஸ், பிரதீபன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இந்த ஆட்டத்தில் வெற்றியீட்டிய ஜொலிஸ்ரார்ஸ் அணியின் வீரர் எஸ். கோகுலபாலன் ஆட்ட நாயகனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**ஜொனியன்ஸ் எதிர் பல்கலைக்கழகம்**

அதே தினம் யாழ். சென். பற்றிக்ஸ் மைதானத்தில்

## விளையாட்டு அரங்கு

நடைபெற்ற ஆட்டத்தில் ஜொனியன்ஸ் அணியை யாழ். பல்கலைக்கழக அணி வென்றது. ஓட்ட விவரம் வருமாறு:-

★ பல்கலைக் கழக அணி: 49.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 177 ஓட்டங்கள். (எஸ். வீரசுதன் — 44, ஆர். வரதன்— 32, எஸ். ரூபராஜ் — 24 ஓட்டங்கள், எஸ். அகிலன் 37 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகள், எஸ். விமலன் 25 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகள்)

★ ஜொனியன்ஸ் அணி: 40.3 ஓவர்களில் 134 ஓட்டங்கள் (ஜி. ஸ்ரீதரன் — 26, பி.சஞ்சீவ் — 23 ஓட்டங்கள், ரி. நரேஷ் 37 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகள், எஸ். ஸ்ரீதரன் 25 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்கள், எஸ். சுதேசன் 9 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகள்.)

ஆட்டத்தின் நாயகனாக ரி. நரேஷ் தெரிவானார்.

**கே. ஸி. ஸி. ஸி எதிர் மானிப்பாய் பரிஷ்**

கடந்த திங்கட்கிழமை யாழ்.சீமாட்டிபுடைவையகத்தின் ஆதரவுடன் யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற விறுவிறுப்பான ஓர் ஆட்டத்தில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய (கே. ஸி.ஸி.ஸி) வி.க. அணி மானிப்பாய் பரிஷ் வி.க. அணியை 11 ஓட்டங்களால் தோற்கடித்தது. விவரம் வருமாறு:

★ கொக்குவில் அணி: 50 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 244 ஓட்டங்கள். (எம். ஜனார்த்தன் —50, எஸ். சபா நாத்–40, ரி. ஜனகன் ஆட்டமிழக்காமல் — 32 ஓட்டங்கள், கே. வரப்பிரதன் 35 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகள், எஸ். ஜெகநீதன் 43 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகள்.)

★ மானிப்பாய் அணி:- 50 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 233 ஓட்டங்கள் (என். வீரசிங்கம் — 69, எஸ். பாஸ்கரன் — 50, ஆர். றொபின்ஸன், கே. துஷ்யந்தன், வை. ஜெகதாஸ் தலா 2 விக்கெட்டுகள்.)

திறமையாக விக்கெட் காப்புச் செய்த கொக்குவில் அணி வீரர் கே. கேதீஸ்வரன் ஆட்டத்தின் நாயகனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதுவரை நடைபெற்ற ஆட்டங்களின்படி கழக அணிகள் பெற்ற புள்ளிகள் வருமாறு:

| கழக அணி | ஆட்டங்கள் | வெற்றி | தோல்வி | புள்ளிகள் |
|---|---|---|---|---|
| ஜொலி ஸ்ரார்ஸ் | 1 | 1 | — | 5.01 |
| கொக்குவில் ஸி. ஸி. ஸி. | 1 | 1 | — | 4.24 |
| யாழ். பல்கலைக்கழகம் | 1 | 1 | — | 3.77 |
| மானிப்பாய் பரிஷ் | 1 | — | 1 | 3.13 |
| ஜொனியன்ஸ் | 1 | — | 1 | 2.34 |
| கிறாஸ்கொப்பர்ஸ் | 1 | — | 1 | 1.60 |

மாவட்டங்களுக்கு இடையிலான மாகாண மட்ட நிகழ்ச்சி:

# பங்குபற்றிய ஒரேயொரு யாழ். வீரர் மெய்வன்மைப் போட்டியில் சாதனை

யாழ்ப்பாணம் ஓக. 29

வடக்கு- கிழக்கு மாகாண கல்வி, கலாசார, விளையாட்டுத்துறை அமைச்சினால் இம் மாத முற்பகுதியில் வவுனியாவில் நடத்தப்பட்ட —மாவட்டங்களுக்கு இடையிலான — மெய்வன்மைப் போட்டியில் யாழ். மாவட்டத்திலிருந்து ஒரேயொரு மெய்வல்லுநர் மட்டுமே பங்குபற்றினார். அவரே அந்த மெய்வன்மைப் போட்டியில் சிறந்த வீரராகத் தெரிவு செய்யப்பட்டதுடன், கள நிகழ்ச்சி ஒன்றில் புதிய சாதனை ஒன்றையும் நிலை நாட்டினார்.

இந்த மெய்வன்மைப் போட்டியில் யாழ்.மாவட்டத்திலிருந்து பலர் பங்குபற்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டபோதும், போக்குவரத்துச் சேவைகள் தடைப்பட்டதால் யாழ். மெய்வல்லுநர்களுக்கு—பல ஆண்டுகளுக்குப் பின்னர்—முதற் தடவையாக மாகாண மட்டத்தில் நடைபெறும் மாவட்டங்களுக்கு இடையிலான மெய்வன்மைப் போட்டியில் பங்குபற்றக் கிடைத்த வாய்ப்பு இல்லாமல் போயிற்று.

எனினும் நேரத்துடனேயே திருகோணமலைக்குச் சென்றிருந்த யாழ். மாவட்ட மெய்வல்லுநரான செல்வராஜா ரமணன் என்ற ஒருவர் மட்டும் யாழ். மாவட்டத்தின் சார்பில் இப்போட்டிகளில் பங்குபற்றினார். திருகோணமலையில் தங்கியிருந்த யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி கே. டபிள்யூ. விமலராஜன், இவர்பங்குபற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

யாழ். வீரர் ரமணன் முப்பாய்ச்சல் நிகழ்ச்சியில் 14.2 மீற்றர் தூரம் பாய்ந்து முதலாவதாக வந்ததுடன் பழைய சாதனையான 13.77 மீற்றர் தூரத்தை முறியடித்தார். உயரம் பாய்தலில் 2 ஆம் இடத்தையும், நீளம் பாய்தலில் மூன்றாம் இடத்தையும் அவர் பெற்றார்.

முப்பாய்ச்சல் நிகழ்ச்சியில் அவர் ஈட்டிய சாதனைக்காக வடக்கு — கிழக்கு மாகாணத்தின் 1997 ஆம் ஆண்டுக்கான மிகச் சிறந்த மெய்வல்லுநராகவும், கள நிகழ்ச்சியில் சிறந்த வீரராகவும் அவர் அறிவிக்கப்பட்டார்.

சர்வதேச அமெச்சூர் மெய்வன்மை சம்மேளனத்தின் புதிய பெறுபேற்றுப் புள்ளி அட்டவணையின்படி ரமணனின் முப்பாய்ச்சல் சாதனைக்கு 849 புள்ளிகள் வழங்கப்படுகின்றன. வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இப் புள்ளிப் பெறுபேறை அண்மைக்காலத்தில் எவரும் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

விளையாட்டுத் துறை அமைச்சினால் நடத்தப்படும் அகில இலங்கை மெய்வன்மைப் போட்டியில் பங்குபற்றும் தகுதியையும் ரமணன் பெற்றிருக்கின்றார்.

(உ)

## உதைபந்தாட்ட பருவகாலம் ஆரம்பமாகின்றது

உதைபந்தாட்டபருவகாலம் ஆரம்பமாவதை அடுத்து யாழ்ப்பாணப் பாடசாலைகள் தமது உதைபந்தாட்ட அணிகளின் பயிற்சிகளை ஆரம்பித்துள்ளன.

கல்வி வலயம் I, கல்வி வலயம் II, ஆகியவற்றின் ஏற்பாட்டில் தனித்தனியாக வலய மட்டத்தில் — மூன்று வயதுப் பிரிவுகளில் — உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் நடைபெறவிருப்பதாகத் தெரிய வருகின்றது. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## உதிரும் பூமாலை

அரசாங்கத்தின் அதிகாரப் பரவல் திட்டத்தை நாடாளு மன்றத் தெரிவுக்குழு ஆராய்ந்து வருகிறது. அதன் செயற்பாடுகள் நிறைவேறி, முடிவு வெளியாகிய பின்னரே, ஐக்கிய தேசியக் கட்சி தனது தீர்வுத் திட்டம் குறித்த நிலைப் பாட்டைத் தெரிவிக்கும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரம சிங்கா இந்தத் தகவலை வெளி யிட்டுள்ளார்.

அதிகாரப் பரவல் திட்டம் உட்பட்ட அரசமைப்புத் திருத் தத்தை சர்வஜன வாக்கெடுப் புக்கு விடப்போவதாக ஜனாதி பதி அனுராதபுரத்தில் வைத் துப் பகிரங்கமாக வெளியிட் டரர்.

ஆனால் பிரஸ்தாப திட்டத் தின் அம்சங்கள் சிலவற்றை நாடாளுமன்றத் தெரிவுக்குழு வின் முடிவுக்கு விடவும், மற் றும் சிலவற்றை சர்வஜன வாக் கெடுப்புக்கு விடவுமே அரசு நடவடிக்கை எடுக்கப் போகி றது என்றவாறு எதிர்க்கட்சித் தலைவர் கூறியுள்ளார்

உண்மையில் இந்த இரண் டில் எது சரி, என்ன நடக்கப் போகிறது என்பது தெளிவாக இல்லை. தெரிவுக் குழுவின் முடிவு தெரிந்த பின்னரே சர்வ ஜன வாக்கெடுப்பு நடத்தப் படும் என்று அரசியல் வட்டா ரங்களில் எதிர்பார்க்கப்படு கிறது.

எப்படியோ, அதிகாரப் பர வல் (தீர்வுத்) திட்டம் குறித்து. அதன் பல அம்சங்கள் — முக் கிய அம்சங்கள் — குறித்து, அரசாங்கக்கட்சிக்கும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசி யக் கட்சிக்கும் இடையில் கருத்தொற்றுமை இல்லை. இணக்கப்பாடு வருவது மிகவும் கடினம் என்பது தெரிகிறது.

தீர்வுத் திட்டத்துடன் சம்பந் தப்படாத பல விடயங்களில் பொதுவான விவகாரங்களில் இருதரப்பாருக்கும் இடையில் பெரும் கருத்து மோதல் மட்டு மன்றி அரசியல் மோதலும் உண்டு.

இந்த மோதல்களின் ஓரங்க மாக, எதிர்க்கட்சிப் பிரமுகர் கள் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் மதிப்பைக் கெடுக் கும் விதத்தில் அரசு நடந்து கொள்வதாக ஐ. தே. க. பக் கத்தில் பெரும் குமுறல் ஏற் பட்டுள்ளதாக அறியப்படுகி றது.

பட்டலந்த ஆணைக்குழு முன் விசாரிக்கப்படுவதற்கு ரணில்அழைக்கப்பட்டிருப்பது, சிறிசேன கூரே கைது செய் யப்பட்டுத் தடுத்து வைக்கப் பட்டது, பிரேமதாச நிலைய விவகாரம் என்பன ஐ. தே. கவை அரசு மீது கோபங் கொள்ள வைத்திருக்கின்றன.

அதே போல, சுதந்திர தேர்தல் ஆணைக்குழு, சுதந் திர பொலிஸ் ஆணைக்குழுக் களை நிறுவுவதனை அரச மைப்புத் திருத்தத்துக்கு வெளியே வைத்துக் கொண் டால் மட்டுமே அதிகாரப் பர வல் தீர்வுத் திட்டத்துக்கு ஆத ரவு தர முடியும் என்ற ஐ. தே. கவின் நிலைப்பாடு அர சுக்குக் கோபத்தை மூட்டி யுள்ளது.

இவ்வாறு இரு தரப்பினரும் தமக்குள் குடுமிச் சண்டை பிடித்துக் கொள்வதால், அதி காரப் பரவல் திட்டம் குரங் கின் கைப் பூமாலையாக உதிர்ந்து போகும் நிலை உரு வாகி வருகிறது இனப்பிரச்சி னைத் தீர்வுக்கு ஒரே அணி யில் நின்று செயற்படுவது என்ற இணக்கப்பாடும் காற் றோடு பறக்கிறது

இனப்பிரச்சினை தீர்வு எப் போதும் போலவே, அரச— எதிர்க்கட்சிகளிடையே அடி பட்டுப் பிய்ந்து போகும் பந் தாகி விடும் ஆபத்து இப் போது தோன்றி உள்ளது.

# சிங்கள ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கை

## செப். 17 இல் வெளியிடப்படும்

கொழும்பு, ஒக. 29

சிங்கள மக்களின் உரிமைகளை நிலை நாட்டும் நோக்குடன் அமைக்கப்பட்ட சிங்கள ஆணைக்குழு தனது இடைக்கால அறிக் கையை அடுத்த மாதம் 17ஆம் திகதி வெளி யிடவிருக்கிறது.

பொரளையில் உள்ள பௌத்த இளை ஞர் மன்றக் கட்டடத்தில் இருந்து ஊர்வல மாக இந்த இடைக்கால அறிக்கை எடுத்துச் செல்லப்பட்டு பௌத்த காங்கிரஸ் மண்டபத் தில் வைத்து தேசிய கூட்டுக்கமிட்டித் தலை வரான முன்னாள் நீதியரசர் ராஜா வனசுந் தரவிடம் கையளிக்கப்படும்.

அதன் பின்னர் இந்த அறிக்கை மூன்று மகாநாயக்கர்களுக்கும், சகல அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்படும்.

இந்த இடைக்கால அறிக்கையை அவசர மாக வெளியிடக் காரணம் என்ன என்று சிங்கள ஆணைக்குழு உறுப்பினர் ஒருவரிடம் கேட்டபோது, ''அரசாங்கம் முக்கிய சில தீர்மானங்களை எடுக்க உத்தேசித்துள்ளது. அதன் காரணமாகவே இந்த அறிக்கை அவ சரமாக வெளியிடப்படுகிறது'' என்று தெரி வித்தார்.

200 பேரின் சாட்சியங்களும் 25 பொது அமைப்புக்களின் அறிக்கைகளும், சில சிபார்சு களும் இந்த அறிக்கையில் இடம்பெறுவதாக வும் தெரிவிக்கப்பட்டது.

அறிக்கை கையளிப்பு தொடர்பான நிகழ் வில் 5ஆயிரம் பிக்குகளும் பங்கு பற்றுகின் றனர்.

(இ-150-3)

### மீளக் குடியமரும் மக்களுக்கு

## ப. நோ. கூ. ச. ஆற்றவேண்டிய சேவைகுறித்துகலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக. 29

வலி—வடக்கு, வலி—தெற்கு பகுதிகளில் மீளக் குடிய மரும் மக்களுக்கு ப. நோ. கூ. சங்கங்கள் ஆற்றவேண்டிய சேவை குறித்து யாழ். செயலகத்தில் கூட்டுறவாளர்களுக்கு நேற்று முன்தினம் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் வந்துள்ள வடக்கு — கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் க. சண்முகலிங்கம் இக்கலந்துரை யாடலை நடத்தினார்.

தெல்லிப்பளை, சுன்னாகம், அளவெட்டி ப. நோ. கூ. சங்கங்களின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள் ஆகி யோர் இககலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

மீளக் குடியமர்ந்த மக்களுக்கு ப. நோ. கூ. சங்கங்கள் ஆற்றவேண்டிய பணிகள் குறித்து எடுத்துக்கூறிய ஆணையா ளர், சங்கங்களின் தேவைகள் பற்றிய விவரங்களை தந்துதவு மாறு கேட்டுக் கொண்டார். (இ-3)

### நல்லூர் உற்சவகாலச் சிறப்பம்சம்

## செப்பிடுவாய், செல்வக்குமரவேளே!

குன்றங்க லாறிலுங்கொடியிலங்க குடிகொண்டரசு
புரியுங்குமரா
அந்நாள் வேல் வாளெடுத்தரக்கரை
யழித்தொழித்தே பகை
வென்றவனே, தென்றலிலும் நீதிதர்மம் குழைந்தசேர
சோழ பாண்டிய
மண்டலஞ் சூழ் தென்னகத் தலைவனே!
தென்னிலங்கைக் கதிர்காம மன்னாதிமன்னா; மால்
மருகா!
உன்னரும் யாழ். நகர், பாழ் நகரானதைக் கண்ட
பின்னும் ஏன் மௌனமையா? பொன் மவுலி சூடுமுடி
மன்னர்
பலராண்ட புகழ் மங்கா நல் லூரின் நல்லோனே!
வல்லோனே!
மன்றாடும் மனங்களுக்கு மாரியெனக் கொட்டிடுஞ்
சிங்கார
வேலவனே, சங்கிலியின் கடவுளே! தங்கத்தமிழரை
வன்னியின்காடும், சூடும் வறுமையும் வருத்தமும்
வருத்துதலுன்
பன்னிருவிழிகளி லொன்றேனுங் கண்டிலதோ?
அன்னைத்தமிழ் அரியணையிலமர்ந் தரசோச்சும்
பொற்காலம்
எம்மண்ணி லினியொரு போதும் புலராதா? ஏன்
சென்னிதாழ்த்தியுன் திருக்கழல்களைப் பற்றினேன்,
பற்றினேன், பற்றினேன்!
செப்பிடுவாய் நல்லையின் செல்லக்குமரவேளே!

— உடுவில் தே.ச. வில்சன்

## வெந்துயர் தீர்த்திடுவேலவனே!

அஞ்சேல் எனநிதம் அபயம் அளித்தருள்
அறுமுகனே! அருள்நல்லை நாயகனே!
தஞ்சம் உன்பொன்னடி என்றுனைப் பரவினோம்
தந்தருள் திருவருள் திருமுருகா!
பஞ்சம் பசிபிணி பழவினை பறந்திடப்
பணிந்தோம் நின்தலம் பக்திமையாய்
வெஞ்சமர் செய்தனை சூரனை வீழ்ந்தினை
வெந்துயர் தீர்த்தருள் வேலவனே.

— தா. தேவமதுரம்

## வரமருளும் முருகனே!

தொழு வார்க்குத் தொல்லைகள் போக்கி
அண்டி நாளும் கசிந்துருகி
அழுவார்க்கு அல்லல் நீக்கி அவர்கள்
வேண்டு வரமருளும் முருகோனே
உலகம் உய்ய வேண்டி ஆடுமயிலினில்
ஏறி அடியவர் புடைசூழ
உலாவரும் உத்தமா, நல்லை நாதனே
நின்சேவடி சரணம், சரணம்!

— கோண்டாவில் க. தியாகராசா

## வில்லிசை

வட்டுக்கோட்டை வடக்கு பிரமனாட்சிதோட்டத் துகற் பகப் பிள்ளையாரின் 3 ஆம் நாள் உற்சவமான இன்று சிறப்பு நிகழ்வாக நாதன் இசைக் குழுவினரின் '' தும்பி யும் நம்பியும்'' என்ற தலைப் பில் வில்லிசை இடம்பெறும்

## மிளகுக்கு தட்டுப்பாடு

குடாநாட்டில் மிளகுக்குப் பலத்த தட்டுப்பாடு ஏற்பட் டுள்ளது.

சில கடைகளில் 1 கிலோ மிளகு 400 ரூபா முதல் 500 ரூபா வரை விற்பனை செய் யப்படுகிறது, (இ.100)

## விசேட அ.அட்டை

ஜே. 68, ஜே. 69 கிராம சேவகர் பிரிவுகளுக்கு உட் பட்ட மக்களுக்கான விசேட அடையாள அட்டைகள் நாளைமறுதினம்ஞாயிற்றுக் கிழமை காலை 9-00 மணி முதல்குருநகர்புனித யாகப் பர் ஆலய மண்டபத்தில் வைத்து வழங்கப்படும்.

## கப்பல் ஒன்றைப் பெற மீண்டும் கேள்விப் பத்திரம்

கொழும்பு, ஒக. 29

திருகோணமலைக்கும், காங்கேசன்துறைக்கும் இடையில் சேவையில் ஈடுபடுத்த கப்பல் ஒன்றைப் பெற மீண்டும் கேள் விப் பத்திரங்கள் அத்தியாவசிய சேவைகள் நாயகத்தால் கோரப்பட்டுள்ளன.

ஏற்கனவே இது தொடர்பாக கேள்விப்பத்திரம் கோரப் பட்டு கடந்த 20ஆம் திகதியுடன் முடிவடைந்தது.

சேவையில் ஈடுபடுத்த தேவையான வசதிகளுடன் கப்பல் கிடைக்காததால் மீண்டும் கேள்விப்பத்திரம் கோரப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டது.

கேள்விப் பத்திரங்களின் இறுதித் திகதி எதிர்வரும் 4ஆம் திகதி ஆகும்.

(இ-150-3)

## சம்பந்தன் நியமனம் குறித்து திருமலைக் கிளை முடிவுசெய்யும்

திருகோணமலை, ஒக. 29

நாளை மறுதினம் அவசரமாக கூட்டப்படும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் திருகோணமலைக் கிளைக் கூட் டத்தில் திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினர் நியமன விடயம் ஆராயப்படவிருக்கிறது.

திருகோணமலை மாவட்ட எம். பியாக தேர்தல் ஆணையாளரால் அறிவிக்கப்பட்டுள்ள இரா. சம்பந்தன் லண்டன் பயணத்தை முடித்துக்கொண்டு நேற்று முன் தினம் திருகோணமலைக்கு வந்துள்ளார்.

கிளைத் தலைவர் ஈழத்துநாதன் தலைமையில் சம் பந்தனின் வீட்டில் நடக்கும் இக் கூட்டத்தில் சம்பந்தனை எம். பியாக பதவிப் பிரமாணம் செய்யுமாறு கேட்கப்பட விருக்கிறது.

திருகோணமலை எம். பியாக இரா. சம்பந்தனை தமி ழர் விடுதலைக் கூட்டணித் தலைமைப்பீடம் தெரிவு செய்த போதும் திருகோணமலைக் கிளையின் ஆலோசனைப் படியே தாம் இந்த விடயத்தில் முடிவு செய்யப் போவ தாக சம்பந்தன் தெரிவித்திருந்தார். (இ-150-3)

### மொறட்டுவ பல்கலைக்கழக

## தொழில்நுட்பவியல் டிப்புளோமா கற்கை நெறிக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஒக. 29

மொறட்டுவ பல்கலைக்கழக தொழில்நுட்பவியல் தேசிய டிப்ளோமா கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட் டுள்ளன.

இதற்கான விண்ணப்பங்களை அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்ப வேண்டும் என்று கோரப்பட்டுள் ளது.

இந்தக் கற்கை நெறி தொடர்பான 01-08-97 ஆம் திக திய வர்த்தமானியை 361, கஸ்தூரியார் வீதியில் அமைந் துள்ள '' உதயன் '' காரியாலயத்தில் பார்வையிடலாம்.

(இ-3)

## குறிகாட்டுவான்-வங்களாவடி படகுச்சேவை ஆரம்பம்

நயினாதீவு, ஒக. 29

பிரயாணிகளின் வசதி கருதி கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் நயினாதீவி லுள்ள வங்களாவடியில் இருந்து தினமும் காலை 7.30 மணிக்கு குறிகாட்டுவானுக்கு படகுச் சேவை ஒன்று ஆரம் பிக்கப்பட்டுள்ளது.

இந்தப் படகு பிற்பகல்3.30 மணிக்கு குறிகாட்டுவானில் இருந்து புறப்பட்டு நயினா தீவு வங்களாவடிப் பாலத் தைச் சென்றடையும்.

இந்தப் படகுச்சேவையை நடத்துவதற்கு வசதியாக நயினாதீவு பிரஜைகள் குழு பாலத்தை புனரமைப்புச் செய்து உதவியுள்ளது.

(இ-10)

## நாளை

**ஆவணி 14**

சனிக்கிழமை

திதி : திரயோதசி
பின் இரவு 2.14 வரை.
நட்சத்திரம் :பூசம்
முன் இரவு 9.00 வரை.
சனிப்பிரதேஷ விரதம்
சுபநேரம்: 3.05-4.35
ராகுகாலம்: 9.05-10.35
(இரவுக்கும் பகலுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினையிலிருந்து பாதயாத்திரை இன்று புறப்படும்

நல்லூர்க் கந்தசாமி கோயில் இரதோற்சவத்தையொட்டி 33 ஆவது ஆண்டு நயினை நல்லூர் பஜனைப் பாதயாத்திரை வழமை போல் இன்று ஆரம்பமாகின்றது.

இன்று காலை நயினை நாகபூஷணி அம்பாள் சன்னிதானத்தில் நடைபெறும் விசேட பூசையுடன் வேல் எடுத்துக்கொண்டு ஆரம்பமாகும் பாதயாத்திரை குறிகாட்டுவான், புங்குடுதீவு, வேலணை, மண்கும்பான், அல்லைப்பிட்டி, பண்ணை பெரியகடை, வில்லூன்றி, கந்தர்மடம் வழியாக எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை நல்லை ஆதீனம் சென்று நல்லூர் கந்தசுவாமி கோயிலைச் சென்றடையும்.


★ துரித சேவை!
★ தரமான பிரதிகள்!!
★ முற்பணம் இல்லை!!!

உங்கள் கலர்ப் புகைப்படச் சுருள்களைக் கழுவிப் பெற்றுக் கொள்ள:

சுனில் ஆர்ட்ஸ்

172, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/1410)



துரித சேவை
விரையுங்கள்!

★ அடையாள அட்டை மற்றும் ஆவணங்கள் கவரிடுதல். (லமனேற்றிங்)

★ தெளிவான போட்டோஸ்ரற் பிரதிகள்,

★ றோணியோ பிறின்ரிங் வேலைகள்.

இவை அனைத்தும் ஒரே இடத்தில்

★ அருண் ★

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி/1243)



புத்தம் புதிய சாறி வகைகளும்
மற்றும்
பனாரீஸ் பட்டு வகைகளும்
தருவிக்கப்பட்டுள்ளன என்பதை
வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்

கோபிகா ஆடை அகம்

இல. 4, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

[சி/1428]



விளையாட்டுத்துறைச் செய்தியாளர்

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் விளையாட்டுத்துறைச் செய்திகளை சேகரித்து உடனுக்குடன் அனுப்பக்கூடிய செய்தியாளர்கள் தேவை. விளையாட்டுத் துறைத் தொடர்பு தமிழ், ஆங்கில மொழி அறிவு பற்றிய விவரம், முன் அனுபவம் இருப்பின் அது பற்றிய தகவல் ஆகியவற்றையும், நற்சான்று வழங்கக் கூடிய இரு பெரியோரின் பெயரையும் குறிப்பிட்டு உடன் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:

பிரதம ஆசிரியர்,
உதயன் - சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


# யாழ். வந்த...

(முதலாம் பக்கத் தொடர்)

பலாலி விமான நிலையத்தில் என்னை யாழ். மாவட்ட இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் கருணதிலக சந்தித்தார். பொலீஸ் அதிகாரிகள் எவரும் அங்கு வரவில்லை.

மேஜர் ஜெனரல் கருணதிலக, மேஜர் ஜெனரல் எல். பி. பலகல்ல ஆகியோருடன் எனது விஜயத்தின் நோக்கம் குறித்து கலந்துரையாடினேன் எனக்கு அவர்கள் நல்ல ஒத்துழைப்பு தந்தனர்.

அதன் பின்னர் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம், அன்னையர் முன்னணி ஆகியவற்றின் பிரதிநிதிகளுடனும், சமாதானத்துக்கும் ஐக்கியத்துக்குமான அமைப்பின் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடி விவரங்களைப் பெற்றேன்.

நீதிமன்றத்துக்கு சென்று நீதிவான், சட்டத்தரணிகள் திடீர் மரண விசாரணை அதிகாரி ஆகியோரையும் சந்தித்தேன்.

சட்ட விரோதக் கொலைகள், படையினராலும், பொலீஸாராலும் விசாரணையின்றி ஆள்கள் கொல்லப்படுதல் ஆகியவைகுறித்து ஆராய்ந்து ஐ. நா. மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு அறிக்கை சமர்ப்பிப்பதே எனது பணியாகும்.

இங்கும் படையினரின் நடவடிக்கைகளாலும், ஏனைய நடவடிக்கைகளாலும் ஆள்கள் கொல்லப்படுவது குறித்து எனக்கு முறைப்பாடு செய்யப்படுகின்றது.

இவ்வாறு கொல்லப்படுவோர் தொடர்பான சட்ட நடவடிக்கைகளைப் பொலீஸாரே மேற்கொள்வதாக சம்பந்தப்பட்ட தரப்புகளால் எனக்குத் தெரிவிக்கப்பட்டது.

இந்த உயிரிழப்புக்கள் குறித்து பொதுவாக ஏற்றுக்கொள்ளக் கூடிய சட்ட முறைகளில் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றனவா? அது தொடர்பான அவசரகாலச் சட்ட விதிகள் உலக நீதிக்கு ஏற்புடையனவா? என்பது குறித்து நாம் அறிவதற்கு பொலீஸாரின் தரப்புக் கருத்துக்கள் அவசியம்.

அவர்களிடம் ஏதும் கேட்டு, விசாரித்து, அறியாமல் நாம் எந்த முடிவுக்கும் வரமுடியாது. இந்த வகையில் யாழ். குடாநாட்டில் பொலீஸ் அதிகாரிகளை சந்திக்கமுடியாமல் போனது எமது விஜயத்திற்கான முயற்சியில் ஓர் இடைவெளியை (Gap) ஏற்படுத்தியுள்ளது.

எமக்கு வெளிவிவகார அமைச்சால் வழங்கப்பட்ட நிகழ்ச்சி நிரலின்படி எம்மை பலாலி விமான நிலையத்திலேயே யாழ். பொலீஸ் அதிகாரிகள் வரவேற்றிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் அங்கு வரவில்லை.

எமது தொடர்பாளர்கள் இங்கு பலதடவை அவர்களுடன் தொடர்பு கொள்ள முயன்றபோதும் அவர்களுடன் தொடர்பு கொள்ள முடியவில்லை.

இதனால் எமக்கு அதிருப்தியே. கொழும்பு திரும்பியதும் இது குறித்து பொலீஸ்மா அதிபரைச் சந்தித்துப் பேசுவேன்.

இது தவிர்த்துப் பார்த்தால் எமது யாழ். விஜயம் பயனுள்ளதே என்று கருதுகிறேன். — இவ்வாறு அவர் மேலும் கூறினார்.

எதிர்வரும் 5 ஆம் திகதி வரை கொழும்பில் தங்கியிருக்கும் சமயம் மட்டக்களப்பு, இரத்தினபுரி பகுதிகளுக்கும் அவர் விஜயம்மேற்கொள்ளவிருக்கிறார்.

நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ், வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், கொழும்பு மேயர், மனித உரிமை அமைப்புக்களின் பிரதிநிதிகள், தமிழ்க் கட்சிகள் உட்பட ஏனைய அரசியல் கட்சி பிரமுகர்கள் ஆகியோரையும் சந்திக்க விருப்பதாக அவர் தெரிவித்தார்.

ஜெனிவா திரும்பியதும், இலங்கை நிலைவரம்தொடர்பாக விவரமான அறிக்கையை ஜெனிவாவில் உள்ள ஐ. நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்க விருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (உ-3)

# புளியங்குளத்...

(முதலாம் பக்கத் தொடர்)

விடுதலைப் புலிகள் தரப்பில் கப்டன் பாலமுருகன் (யாழ்ப்பாணம்), சங்கர் (கிளிநொச்சி) ஆகியோர் களப்பலியானதாக 'புலிகளின் குரல்' தெரிவித்தது.

கிளிநொச்சியில் நடந்த மோதல் ஒன்றில் தமது தரப்பில் மேகவர்மன் (ஆனையிறவு) என்பவர் களப்பலியானதாகவும் புலிகளின் குரல் தெரிவித்தது. (இ-11...)

# பாஸ்கரலிங்கம் உட்பட மூவரின் குடியுரிமை பறிக்க பிரேரணை

கொழும்பு, ஒக. 29

முன்னாள் ஐ.தே. அமைச்சர் விஜயபால மெண்டிஸ், பிரேமதாஸ ஆட்சிக் காலத்தில் நிதியமைச்சின் செயலாளராக இருந்த ஆர். பாஸ்கரலிங்கம், மின்சக்தி, எரிபொருள் அமைச்சுச் செயலாளராக இருந்த ஹக்கீல் முகமட் ஆகியோரின் வாக்குரிமை உட்பட சகல குடி உரிமைகளையும் பறிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்த மூவரும் ஊழல் குற்றவாளிகள் என்று ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணையின் போது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் அமைச்சர் விஜயபால மெண்டிஸும், வெளிநாட்டு உதவிகள் தொடர்பாக பணியாற்றி வந்த ஏனைய இருவரும் சிவில் தகுதியற்றவர்கள் என்று பிரகடனம் செய்வதற்காக அடுத்த மாதம் பிற்பகுதியில் நாடாளுமன்றத்தில் பிரேரணை ஒன்று சமர்ப்பிக்கப்படும் என்று வெகுஜனத் தொடர்பு அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

முன்னைய ஆட்சிக் காலத்தில் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைப்பு அமைச்சர் பதவியையும், வேறு பல அமைச்சுப் பொறுப்புக்களையும் வகித்து வந்த விஜயபால மெண்டிஸ் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராவார்.

ஐந்து வருட காலத்துக்கு இவர்களின் சிவில் உரிமைகள் ரத்துச் செய்யப்படும்.

விஜயபால மெண்டிஸ் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்தும் நீக்கப்படுவார்.

அரசாங்க நிறுவனங்களில் ஊழல்களையும், ஒழுங்கீனங்களையும் விசாரணை செய்து வந்த ஜனாதிபதி ஆணைக்குழு இந்த மூவர் மீதும் சிவில் தகுதியில்லை என்று பிரகடனம் செய்யுமாறு சிபார்சு செய்துள்ளது.

இதன்படி ஆணைக்குழுவின் 5 ஆவது இடைக்கால அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பது எனவும்—

இந்த விவகாரம் தொடர்பான பிரேரணையை பிரதமர் மூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பது எனவும்— அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

இந்த பிரேரணையை அங்கீகரிப்பதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியமாகும்.

ஐ. தே. க. ஊழலுக்கு எதிரானதா என்பதை பரீட்சிப்பதற்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பம் என்று அமைச்சர் மங்கள சமரவீர நேற்று நடந்த அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிப்பதற்கான செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இந்த மூவருக்கும் எதிராகச் சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவிருக்கிறது.

பாஸ்கரலிங்கம் தற்சமயம் வெளிநாட்டில் இருப்பதால் அந்த நாட்டு அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# ராஜீவ்...

(முதலாம் பக்கத் தொடர்)

யும் நீதிபதி ஜெயின் வெளியிட மறுத்துவிட்டார்.

இந்த படுகொலை தொடர்பான விசாரணைகள் அனைத்தும் இன்னும் 6 மாதத்துக்குள் முடிவுறும் எனச் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்தார்.

நேற்று நீதிபதி ஜெயினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை சுமார் 2 ஆயிரம் பக்கங்களை கொண்டது எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

# பயிற்சி வகுப்பு

தென்மராட்சி. ஒக. 29

பனம்பொருள் கைப்பணி பயிற்சி வகுப்பு அண்மையில் சாவகச்சேரி கல்வயலில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (இ-117)

# ஒரு கிலோ மீற்றருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

போர்க்களத்தில் அண்மைக்காலமாக அரசுக்கு வெற்றி கிட்டாமல் இருப்பதை தமிழ்ப் புலிகள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திவந்தனர்.

அண்மைக்கால இராணுவ முன்னேற்றம் கடுமையான எதிர்த் தாக்குதல்களால் தடைப்பட்டுள்ளது எனவும் போரினால் சோர்வடைந்துள்ள படையினர் குழப்பமடைந்துள்ளனர் எனவும் புலிகள் கூறுகின்றனர்.

ஒரு வாரத்துக்கு மேலாக அரசுப் படைகள் எந்த முன்னேற்றமும் இன்றி இருந்து வரும் புளியங்குளத்தில், எந்தத் தரப்பு வெற்றி அடைந்தாலும், முன்னேற்றம் என்பது பெரும்பாலும் மெதுவாகவே இடம்பெற்றுள்ளது. எந்த வித பயனும் இன்றி பல இளம் உயிர்கள் இழக்கப்பட்டுள்ளன.

''வெற்றி உறுதி' என்ற இராணுவ நடவடிக்கை தொடங்கியதில் இருந்து இரு தரப்பிலும் ஆயிரத்து நானூறு பேர் கொல்லப்பட்டுள்ளதாகவும் குறைந்தது இதேபோல் இரண்டு மடங்கு பேராவது காயமடைந்து இருக்கலாம் எனவும் கணிப்புகள் தெரிவிக்கின்றன.

ஆனால் போராளிகள் தரப்பில் இழப்புக்கள் அதிகம் எனப் படையினர் தெரிவிக்கின்றனர்.

புலிகள் இதுவரை காணாத அளவுக்கு மிக மோசமான தோல்வியைத் தழுவியுள்ளனர் என ராணுவத்தினர் தரப்பில் பேசவல்ல அதிகாரியான பிரிகேடியர் சரத் முனசிங்க தெரிவிக்கிறார்.

புலிகள் தரப்பில் இரண்டாயிரம் பேர் கொல்லப்பட்டதாகவும் மூவாயிரத்து ஐநூறு பேர் காயமடைந்துள்ளனர் எனவும் அவர் தெரிவிக்கிறார்.

''சில நாள்களுக்குள் போராளிகள் கலைந்து கரைந்து விடுவர்; காரணம் வடக்கில் தற்போது ஐயாயிரம் அல்லது ஆறாயிரம் போராளிகளே உள்ளனர்.'' எனவும் அவர்தெரிவித்தார்.

இந்தப் புள்ளிவிவரங்கள் மிகைப்படுத்திக் கூறப்பட்டுள்ளன எனப் பாதுகாப்பு ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். உயிர் சேதங்கள் இருந்தபோது அவற்றைப் பொருட்படுத்தாமல் இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து மேற்கொள்வதான அரசின் தீர்மானத்தை நியாயப் படுத்தும் வகையில் இந்தப் புள்ளி விவரங்கள் மிகைப்படுத்திக் கூறப்பட்டுள்ளன என்று இராணுவ ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எதிர்பார்த்ததைவிட புதிதாக இராணுவத்தில் சேர்ந்துள்ள இளம் இராணுவத்தினர் புலிகளின் கடுமையான எதிர்ப்பைச் சந்தித்து வருகின்றனர்.

அவர்கள் தொடர்ச்சியாக மோட்டார் தாக்குதல்களைச் சந்தித்து வருகின்றனர்.

ஆனால் எவ்வளவு காலத்திற்கு இந்தச் சண்டையில் அவர்களால் தாக்குப்பிடிக்க முடியும் என்பது இன்னும்கேள்விக்குறியாகவே இருந்து வருகிறது.

இவ்வாறு தெரிவித்தார். (இ-10)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்கள[illegible] மனையில் 29-08-1997 இல் அச்சிட்டு வெளியிடப் [illegible]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org